# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

ர் 24] குரோதிஆண்டு கார்த்திகைத்திங்கள் 10—12—64 [இதழ்



தருமையாதினக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

பரவிமனம் போகாப்
பரத்தடைய நாளும்
இரவுபகல் அற்ற
இடத்தே—திரமாக
நில்என்றுன் கண்டஎல்லாம்
நேதிபண்ணி மும்மலமும்
கொல்என்றுன்
ஞான குரு. (24)

ஆசிரியர்:-

வித்துவான்,

சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகள்

துணையாசிரியர்:-

வித்துவான்,

சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 | 10-12-64 | இதழ் 1

## உட்பொருள்



| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | அணியுடை ஆதிரை நாள் | 1 |
| 2 | புத்தாண்டு ... | 6 |
| 3 | ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளுரை . | 7 |
| 4 | பிழைபொறுத்தல் ... | 17 |
| 5 | தொல்காப்பியச்சொல்லதிகார விளக்கக் கட்டுரைகள் | 20 |
| 6 | தமிழ் கூறு நல்லுலகம் ... | 24 |
| 7 | சஹஸ்ராகமம் ... | 28 |
| 8 | சொக்கன் கோயிலா ... | 32 |
| 9 | சித்தாந்த வினுவிடை ... | 35 |
| 10 | மலரும் மணமும் ... | 41 |
| 11 | நாநலமென்னும் நலம் ... | 45 |
| 12 | மெய்கண்டார் காலம் ... | 49 |
| 13 | சிவாகமத் தெளிவு ... | 54 |
| 14 | செய்திகள் ... | 60 |
| 15 | தலயாத்திரை விபரம் ... | 63 |
| 16 | ஆளுநர் அவர்கள் வரவேற்பு ... | 66 |
| 17 | எதிர்காலம் ... | 70 |


அட்டைப்பட விளக்கம்

தருமையாதீனத்தில்
திருக்கோயில்கொண்டு
அருள் வழங்கும்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ
மகாலக்ஷ்மி துர்க்காதேவி

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24 ] குரோதி - கார்த்திகை - 10—12—64 [ இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## அணியுடை ஆதிரை நாள்

உலகில் மக்கட் பிறப்பினை எடுத்தோர், அப்பிறப்பின் பயனுகச் செய்ய வேண்டுவன, மதிசூடும் அண்ணலார் அடியார்க்கு அமுது செய்வித்தலும், கண்ணிஞல் அப் பேருமாஞரது நல்விழாப் போலிவுகண்டு ஆர்தலுமேயாகும். இவ்வுண்மையை ஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணுக்கிய அதியற்புதச் செயலால், சிறிதும் ஐயத்திற்கு இடமின்றிப் பலரது முன்னிலையில் மெய்ப்பித்துக் காட்டியருளினுர்.

மதிசூடும் அண்ணலாரது விழாக்கள், 'நாள் விழா, கிழமை விழா, பட்ச விழா, மாதவிழா, ஆண்டு விழா' எனப் பலவகைப்படும். இவைகளில் ஆண்டிற்கு ஒருமுறை நிகழும் ஆண்டுவிழாவே மிகப்பெரிய விழாவாகும்.

சிவபெருமானது திருக்கோயில்களில் பெருவிழாக்கள், அவ்வத் திருக்கோயிலின் வரலாறு முதலியவை பற்றி, யாதேனும் ஒருமாதத்தில், திதி பற்றியேனும், நாண்மீன் பற்றியேனும் நடைபெறும். ஆயினும், எல்லாத் திருக் கோயில்களிலும் ஒருசேர நிகழும் பெருவிழா, திருவாதிரைத் திருவிழாவாகும். இத்திருவிழா, இவ்வாறு எல்லாத் திருக் கோயில்களிலும் இன்றியமையாது நிகழும் விழாவாகியது ஏன் ?

நட்சத்திரங்கள் இருபத்தேழில், ஒவ்வோரு நட்சத்திர மும், ஒவ்வோரு தேவர்க்கு உரியது. அவைகளில் ஆதிரை நட்சத்திரம் சிவபெருமானுக்கு உரியதாகும். இதற்குக் காரணம் யாது என்பதனை இப்போழுது நாம் அறிந்து சோல்லுதல் இயலாது. எனினும், 'நாண்மீன்களில் பெரியது ஆதிரை மீனே என்பது அறியப்பட்டுள்ளது; ஆதலின், அது எல்லாத் தேவர்கட்கும் பெரியோனுகிய சிவபெருமானுக்கு உரியதாயிற்று' என்பர்.

இனி, இருபத்தேழு நட்சத்திரங்களுள் தனி நட்சத்திர மாயும், ஒளியுடையனவாயும் இருப்பவை இரண்டே; அவை, ஆதிரையும், சுவாதியும். இவைகளில் ஆதிரை சேவ்வோளி யுடையது; சுவாதீ வேள்ளோளியுடையது. ஆகவே அஃது, ஒருவனுய், சேம்மேனியனுய்த் திகழும் சிவபெருமானுக்கு உரியதாயிற்று எனலாம். இவற்றேடு, அது பேரியதாயின், பேரியோனுக்கு உரியதாதலும் போருத்தமே. எவ்வாறு யினும், திருவாதிரை மீன் சிவபெருமானுக்கு உரியது என்

பது நன்கறியப்பட்டது. "ஆதியன் ஆதிரையன் அன லாடிய ஆரழகன், "ஆதிரை நாள்உகந்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே" 'ஆதியன் ஆதிரையன் அயன் மால் அறிதற்கரிய-சோதியன்" என்பனபோலத் திருமுறை களில் வரும் இடங்கள் பல. சிவபிரானுக்குத் திருவாதிரை நாள் உரியதென்பது பழைய சங்க இலக்கியத்திலேயே காணப்படுவது. ஆகவே, இந்நாளில் எடுக்கப்படும் விழா, எல்லாத் திருக்கோயில்களிலும் இன்றியமையாது நிகழும் தலையாய விழாவாயிற்று.

'மாதங்களிற் சிறந்தது மார்கழி' எனப்படுகின்றது. இதற்குக் காரணம் யாது? தேவர்களுக்கெல்லாம் தேவனாய் நிற்கும் முதல் தேவனும் சிவபெருமானுக்கு உரிய திருவா திரை நாளைக் கொண்ட மாதமாதல் பற்றியேயாம். எந்த நட்சத்திரமும் பௌர்ணமியோடு கூடிவரும்போழுது சிறப்பு டையதாம். அதுபோழுது, அந்த நட்சத்திரத்தால் அந்த மாதமும் சிறப்புடையதாகின்றது. அவ்வாறு திருவாதிரை பௌர்ணமியோடு கூடிவருவது மார்கழித் திங்களிலேயாம். அதனால், அந்தத் திருவாதிரை சிறந்து நிற்க, அந்த மாதமும் சிறப்புடையதாய் விளங்குகின்றது. ஆகவே, சிவபெருமானுக்குச் சிறந்த விழாவும் அந்தத் திருவாதிரை யிலே நிகழ்த்தப்பேறுகின்றது. முதல்வனாகிய சிவபெருமா னது முதன்மையான இவ்விழாநாளில்தான், எல்லாத் தேவர் கோட்டங்களிலும் விழா எடுக்கப்பேறுகின்றது. இதனை முன்னிட்டே மார்கழித்திங்கள் முழுவதும் எந்தச் சிறு கோயிலிலும் விடியற்காலை வழிபாடு தவறாது நடத்தப் பேறுகின்றது.

"ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க"

என்று, திருவாதிரையில் அந்தணர் விழாத் தோடங்கியதைப் பரிபாடலும் சிறந்தேடுத்துக் கூறுகின்றது.

திருவாதிரையில் செய்யப்பேறும் சிவதரிசனமே, 'தரிசனம்' என்று சிறப்பித்துச் சொல்லப்பேறுகின்றது. இவ்விழாநாளில் எல்லாத் தேவர் கோட்டங்களிலும் வழிபாடு சேம்மையாக நிகழ்வது, அவர் அனைவரும் சிவபெருமானது விழாவில் சேவ்வனே வந்து சிறப்பிக்கின்றார்கள் என்பதையே குறிப்பதாகும். திருவாதிரைத் தரிசனத்திற்கு வாராத தேவர் இல்லை. ஆண்டானாகிய சிவபேருமான் திருவுலா வருகிற அணியுடை ஆதிரைநாளில், அவனை வணங்க, ஆர் ஆர் வந்தார்? என்ற கேள்வி எழுமானால், 'யார் வரவில்லை' என்ற கேள்வியே அதற்கு விடையாய் அமையும்.

"ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே"

என்று பாடிக் களிக்கின்றது திருமுறை.

தேவர்களே தவறாது தரிசிக்கும் இத் திருவாதிரை விழாவை மக்கள் தரிசியாதிருத்தல் கூடுமோ? அதனால் தான், "ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்" என்று பூம்பாவையை நோக்கி வினவினார், ஞானசம்பந்தர்.

அப்பர், திருவாரூரிற்குச் சேன்று வணங்கிச் சிலநாள் இருந்த பின்பும் மீளாமல், திருவாதிரைத் திருநாளில்

செய்யும் தரிசனத்தின்பொருட்டுப் பலநாள் அங்கே தங்கி யிருந்து, அத் தரிசனத்தைச் செய்த பின்பே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். சென்று திருஞானசம்பந்தரைச் சந்தித்தபொழுது அவருக்கும் தாம் தரிசித்த ஆதிரைநாள் விழாவினை, "முத்து விதானம்" என்னும் திருப்பதிகத் தாலே சிறப்பாக எடுத்து விளக்கினார். அதிலும், "வணங்கி நின்று வானவர் வந்து வைகலும் - அணங்கன் ஆரூர் ஆதிரைநாள்" என்றும், "இந்திர னாதி வானவர் சித்தர் எடுத்தேத்தும் - அந்திரன் ஆரூர் ஆதிரைநாள்" என்றும் அருளியிருத்தலைக் காண்கின்றோம்.

இத் திருவாதிரைத் திருநாள் முதற்கண் சிவபெருமான் அனவரத தாண்டவம் செய்யும் தில்லைக்கும், அடுத்து வீதி விடங்கப் பெருமான் அஜபா நடனம் செய்கின்ற திருவாரு ருக்கும், அதனை அடுத்து, கூத்தப்பெருமான் விளங்குகின்ற வெள்ளியம்பலம் முதலிய சபைகள் உள்ள தலங்கட்கும் சிறப்பாக உரியது. பொதுவாகத் திருவாதிரைத் திருநாள் எத் தலத்திற்கும் உரிய சிறப்பு நாளேயாகும்.

சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும், நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப் பதிவாழ் சதுக்கத்துப் பூதம் ஈறாக உள்ள எல்லாத் தேவர்கட்கும் ஒருசேர விழா எடுக்கப்பட்டது என்பதனையும், வானோர் உலகம் வறிதாகத் தேவர் யாவரும் அந்நாளில் மண்ணுலகில் வந்து திரிந்தனர் என்பதனையும் நாம் இத் திருவாதிரைத் திருநாளிலே தான் காண்கின்றோம். அஃது அண்மையில் நிகழ இருப்பது, அனைவர்க்கும் அகமகிழ்வை உண்டாக்குவதாம். அமரரும் வந்து காணும் அணியுடை ஆதிரைநாள் விழாவை, மண்ணி னிற் பிறந்த பயனைப்பெற, நாம் அனைவரும் கண்டு, திருவா திரை ஒருவாக் களியை எய்தத் திருவருள் முன்னிற்பதாக.

# புத்தாண்டு

நமது 'ஞானசம்பந்தம்' இதழுக்கு இருபத்து மூன்று ஆண்டுகள் நிரம்பி, இருபத்து நான்காவது ஆண்டு தொடங்கியுள்ளது. இம் முதல்இதழ், இவ்வாண்டின் சிறப்பு மலராகவே மலர்கின்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள், ஞானம்மலர, ஞானத்தின் படிநிலைகளாகிய, தசகாரியங்களைப் பற்றிய அரிய உண்மைகளைத் தங்கள் அருளுரையாக இதன் தலைமணியாய்த் திகழ முதற்கண் வழங்கியுள்ளார்கள். டாக்டர். திரு. அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் M. A., Ph. D. M. L. C. பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் M. A., B. L., திருக்குறள்வேள், திரு. G. வரதராஜப் பிள்ளை B. A., டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A., M. O. L. Ph. D. முதலிய பேரறிஞர்கள் ஆய்ந்து எழுதி அளித்த அரிய கட்டுரைகள் இச் சிறப்பு மலரை அணிசெய்கின்றன.

'சஹஸ்ராகமம்' என்னும் ஓர் ஆகமத்தைப் பற்றிய விளக்கங்களைத் தொடர்பாகச் செய்துவரும், சிவாகம வித்துவான். திரு. S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள், எல்லா ஆகமங்களின் திரண்ட பொருளைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கக் கருதித் தொடங்கியுள்ள, 'சிவாகமத் தெளிவு', குறிப்பிடத்தக்கது. திங்கள்தோறும் வருவதுபோலத் தொடர் கட்டுரைகளும், தனிக்கட்டுரைகளும், பிறவும் இச்சிறப்பு மலரிலும் இடம் பெற்றுள்ளன.

இருபத்து மூன்று ஆண்டுகளாக, 'ஞானசம்பந்தம்' சமயப் பணி முதலியவற்றைச் சிறக்கச் செய்து வந்திருத்தலை நேயர்கள் நன்குணர்வார்கள். அடுத்து வரும் ஆண்டுகளிலும் அப்பணிகள் அங்ஙனமே நிகழ்ந்து, பயன்தருதல் உறுதி. ஆதலின், நேயர்கள், தாங்கள் 'ஞானசம்பந்தத்'தினைத் தொடர்ந்து பெற்றும், பிறரையும் பெறுவித்தும் அனைவர்க்கும் நற்பயன் விளையச் செய்வார்களாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

# அருளுரை

## உண்மைநெறி விளக்கம்

பரைஉயிரில் யான்எனதென் றறநின்ற தடியாம்;
பார்ப்பிடம்எங் கும்சிவமாய்த் தோன்றலது முகமாம்;
உரைஇறந்த சுகமதுவே முடியாகும் என்றங்
குண்மையினை மிகத்தெளிந்து பொருள்வேறென் றின்றித்
தரைமுதலிற் போகாது நிலையினில்நில் லாது
தற்பரையின் நின்றழுந்தா தற்புதத்தி னாகும்
தெரிவரிய பரமானந் தத்திற் சேர்தல்
சிவன்உண்மைத் தெரிசனமாய்ச் செப்பும் நூலே.

—உமாபதிதேவ நாயனார்

கடவுட் கொள்கையின் பயன் கடவுளைக் காணுதலேயாகும். 'கடவுள் இருக்கின்றார்; இருக்கின்றார்' என்று மட்டும் சொல்லி வருவதால், பெரிய பயன் ஒன்றும் விளைந்துவிடாது. கடவுளைக் காண்பதற்கு உரிய வழியிலே நின்று கடவுளைக் காண்பதுதான், கடவுள் நம்பிக்கையின் பயன். கடவுளைக் கண்ட காட்சியினால் தான் கடவுட்கொள்கையே நிலைபெற்று வருகின்றது.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமயாசாரியர் நால்வரும், அவர்களைப்போன்ற பிற பெருமக்களும் இறைவனை நேரே கண்டார்கள்; கண்டு, அதனால் தாங்கள் பெற்ற பயனை உலகத்திற்கு எடுத்துக் கூறினார்கள்.

அதனுல்தான், நம் நாட்டில் கடவுட் கொள்கை மிகவும் வலுப் பெற்று விளங்குகின்றது.

" போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன் "

என்கின்ருர், ஞானசம்பந்தர்.

" பாட அடியார் பரவக் கண்டேன்
பத்தர் கணங்கண்டேன் மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்
அங்கை அனல்கண்டேன் கங்கையாளைக்
கோடல் அரவார் சடையிற் கண்டேன்
கொக்கின் இதழ்கண்டேன் கொன்றை கண்டேன்
வாடல் தலைஒன்று கையிற் கண்டேன்
வாய்மூர் அடிகளைநான் கண்ட வாறே "

என்கின்ருர், நாவுக்கரசர்.

" ............... வெண்ணெய்நல் லூரில்
அற்பு தப்பழ ஆவணங் காட்டி
அடிய னுஎன்னை ஆளது கொண்ட
நற்ப தத்தைநல் லாறனை அமுதை "

என்கின்ருர், நம்பியாரூரர்.

" பெண்ஆண் அலிஎனும் பெற்றியன் காண்க
கண்ணுல் யானும் கண்டேன் காண்க "

என்கின்ருர், மாணிக்கவாசகர். இவற்ருல் நம் ஆசாரியப் பெரு மக்கள் இறைவனை நேரேகண்டு, அக்காட்சியை நமக்கு எடுத் துரைத்தமை விளங்கும். எனவே, ஏனையோரும் அவ்வாறு இறைவனைக் காணுதல் வேண்டும் என்பதே அவர்களது விருப்பமாம்.

இறைவனைக் காண்பதற்கு, அவன், 'இப்படியன் இந் நிறத்தன் இவ்வண்ணத்தன்' என்று உணரமுடியாதவன் அன்ருே என்று கேட்கலாம். அவனருளே கண்ணுகக் காணுத

பொழுதே, அவன் அவ்வாறு அரியவனுய் நிற்பான். அவனருளே கண்ணுகக் காணும்பொழுது அவன், அங்கை நெல்லிக்கனிபோல எளியவனுய் இனிது விளங்கிநிற்பான்.

"தடக்கையின் நெல்லிக் கனிஎனக்கு ஆயினன்,"
"ஆராலும் காண்டற்கு அரியான் எமக்'குஎளிய பேராளன்"

என்பன மாணிக்கவாசகர் திருவாக்குக்கள். இறைவனைக் காணுதலை, 'சிவதரிசனம்' என்று சைவநூல்கள் கூறும்.

'சிவதரிசனம்' என்பது, சிவாலயங்களிற் சென்று சிவலிங்கத் திருமேனி முதலிய திருமேனிகளில் சிவனைத் தரிசித்தல் என்றே பொதுவாக யாவரும் உணர்வது, அஃது உண்மையேயாயினும், 'சிவதரிசனம்' என்பது அதனேடுமட்டும் முடிந்துவிடுவது அன்று. சிவபெருமானைப் புறத்திலே பல திருமேனிகளில் காண்பதுபோல, அகத்திலேயும் காணுதல் வேண்டும்.

"தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணுத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்று திருநாவுக்கரசரும்,

"சிறைவான் புனல்தில்லைச் சிற்றம் பலத்தும்என்
சிந்தையுள்ளும்
உறைவான்"

என்று மாணிக்கவாசகரும் அருளுவதை அறியலாம்.

சிவபெருமான், தன்னை ஆன்மாக்கள் புறத்தும் அகத்தும் தரிசித்து உய்தற்பொருட்டு. அவ்விடங்களில் அவற்றிற்கு ஏற்ற திருமேனிகளைக் கொண்டு நிற்கின்ருன்.

சரியையில் நிற்போர் சிவபெருமானைப் புறத்திலேமட்டும் தரிசிப்பர்; அதனுல், அவர்களுக்கு அவன், தாபர சங்கமங்கள் எனும் இரண்டு உருவில் நிற்கின்ருன். கிரியையில் நிற்போர், அவனை அகத்தும் புறத்தும் தரிசிப்பர்; அதனுல், அவர்களுக்கு அவன், புறத்தே அங்கி ஒளியாய், அகத்தே, இருதயத்திலே

ஊன்றி நினைக்க உள்ளெழும் சுடர்வடிவாய் நிற்பான். யோகியர் அவனை, அகத்தில் மட்டும் தரிசிப்பர். அதனால், அவர்களுக்கு அவன், நினைத்த அளவில் பேரொளி வடிவாய்ப் புருவ நடுவிலே விளங்குவான். ஞானிகள் அவனை அகம் என்றும், புறம் என்றும் வேறுபாடின்றி எங்குமே அவனைத் தரிசிப்பர். அதனால், அவர்களுக்கு அவனும், 'அகம், புறம்' என்ற வேறுபாடின்றி, எங்கும் எப்பொருளிலும் அந்த ஞானமே வடிவாகக் காட்சியளிப்பன். ஞானிகள் செய்யும் இந்த ஞான தரிசனமே உண்மைச் சிவ தரிசனமாகும். இந்தத் தரிசனத்தைச் செய்த பொழுதுதான், 'சிவதரிசனம்' என்பது, குறைவற்ற சிவதரிசனமாய் முற்றுப் பெறுகிறது. அப்பொழுதுதான், சிவதரிசனத்தின் முழுப்பயனும் கைகூடுவதாகும். இந்த ஞான தரிசனம், 'சிவதரிசனம்' என்று, எடுத்த எடுப்பிலே வந்துவிடாது: படிப் படியாகத்தான் வரவேண்டும். அந்தப் படிநிலைகளே, முதலிற் சொன்ன, 'சரியை, கிரியை, யோகம்' என்பவை. அந்தப் படிகளில் ஏறிச்சென்று, ஞானநிலையை அடைந்தபொழுதும், உடனே இந்த ஞானதரிசனம் கிட்டுவது இல்லை. அங்கும் பல படிநிலைகள் உள்ளன. அவற்றைக் கடந்துதான், இந்த உண்மைச் சிவதரிசனத்தைப் பெறவேண்டும். அந்தப்படி நிலைகளையும், சிவதரிசனத்தின் பின் அடையும் அதன் பயன்களையும் மிகச் சுருக்கமாக எடுத்துக்கூறுவதே, 'உண்மைநெறி விளக்கம்' என்னும் சாத்திரம்.

இப் படிநிலைகளைப் பெரும்பாலும், 'தச காரியம்' என்று பத்தாக வகுத்துச் சாத்திரங்கள் கூறும். அவை; 'தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம்' என்பன.

'தத்துவம்' என்பன, மாயா காரியங்களாகிய கருவிக் கூட்டம். இவை நம் அறிவைத் தங்கள்பால் ஈர்த்து, அப்பாற் போகவொட்டாமல் தமக்குள்ளே வைத்துக்கொள்கின்றன. அதனால், நாம் நம்மை அறியும் ஆன்ம ஞானமும், நமக்கு மேல் உள்ள இறைவனை அறியும் சிவஞானமும் இல்லாதவர்களாய், தத்துவக் கூட்டமாகிய உடம்பையே நாம் என்றும், இவ்வுடம்பிற்கும், உலகிற்கும் மேலாக எந்தப் பொருளும் இல்லை என்றும்

நிலைக்கின்றோம். அதனால், இத் தத்துவக் கூட்டத்தை நாம் முதலில் கடக்க வேண்டும். அவற்றைக் கடக்குங்கால் சிறிது சிறிதாகத் தான் கடக்க இயலும்.

முதலில், பிருதிவி முதல் நாதம் முடிவாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் தோற்றமுறை, ஒடுக்கமுறை, அவைகளின் செயல் - இவை என்று தெரியவேண்டும். அவ்வாறு தெரிந்தால் ஓரளவு தத்துவக் கூட்டத்திலிருந்து நம் அறிவு விடுபடும். இதுவே, 'தத்துவ ரூபம்' என்ற முதற்படியாகும்.

பின்பு, 'முப்பத்தாறு தத்துவங்களும் நாம் அல்ல ; அவை நமக்கு வேறானவை ; ஏனெனில், நம் அறிவு அவைகளில் சம்பந்தப்பட்டால் அல்லது, அவை தாமாக ஒன்றும் செய்ய இயலாது ; ஆகவே, அவை சடம் ; நாம் சித்து. அதனால் தத்துவங்கள் ஆன்மா அல்ல' என்று அறிதல் வேண்டும். அப்பொழுது, இன்னும் சற்று அதிகமாகத் தத்துவங்களிலிருந்து விடுதலைபெற முடியும். இது, 'தத்துவ தரிசனம்' எனப்படும். இஃது இரண்டாவது படி.

மூன்றாவதாக, சடமாகிய அவற்றில் பற்றுச் செய்யாமல் அறிவினால் நீங்கியிருத்தல், 'தத்துவ சுத்தி' எனப்படும். தத்துவ சுத்தியை அடைந்த ஆன்மாவைத் தத்துவங்கள் கட்டுப்படுத்தமாட்டா. இந்த முதல் மூன்று படிகளையே, உண்மை நெறி விளக்கத்தின் முதற்பாட்டுக் கூறுகின்றது. தத்துவம் முப்பத்தாறையும் கடந்து சென்றுதான் சிவத்தை அடைய வேண்டும் என்பதை, அருணகிரிநாதர், அனுபூதியில்,

"ஆறா றையும்நீத் ததன்மேல் நிலையைப்
பேறா அடியேன் பெறுமா றுளதோ"

என்று தெளிவாக விளக்கினார். சேக்கிழாரும்,

"பேணுதத் துவங்கள் என்னும் பெருகுசோபானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல"

என்று, கண்ணப்பர் புராணத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தத்துவக் கூட்டங்கள் எல்லாவற்றையும் விட்டொழித்தால்; 'அறிவு' என்பதே இல்லாததுபோலத் தோன்றும். அவ்வாறு

இருளாய்த் தோன்றச் செய்வது ஆணவ மலம். ஆகவே, 'தத்துவங்கள் சடமாகையாலும், சடத்திலிருந்து அறிவு தோன்ருது ஆகையாலும், விறகில் தீயைப்போல, அறிவு ஆணவ மலத்தில் மறைந்துள்ளது; அதுவே, கடைந்த காலத்தில் விறகினின்றும் வெளிப்படும் நெருப்புப்போல, தத்துவங்கள் வந்து சேர்ந்தபொழுது வெளிப்படுகின்றது' என்று இவ்வாறு ஆன்மாவின் உண்மையை உணர்வது, '**ஆன்ம ரூபம்**' எனப்படும். இது, நான்காவதுபடி. இந்த ஆன்ம ரூபம், தத்துவ தரிசனத்திலேயே அரும்பும்.

தத்துவங்கட்கு வேருக, அறிவு வடிவாய் உள்ள ஆன்மா ஒன்று உண்டென்று உணர்ந்த பின்னர், 'அந்த ஆன்ம அறிவு தானே தனித்து நின்று அறியும் சுதந்திரத் தன்மை உடையது அன்று; முடவன் கோலேப்பற்றியே நடத்தல்போல, யாதேனும் ஒரு துணையைப்பற்றி, அஃது அறிவிக்கவே அறியும் தன்மை யுடையது. ஆகவே, அதற்கு உயிர்க்கு உயிராய் என்ஞான்றும் நீங்காது உடன் நிற்கும் சிவத்திஞலே அறிவுபெற்று, அது செலுத்திய வழியே செல்வதாகும்' என்று தெரிவதே, '**ஆன்ம தரிசனம்**' எனப்படும். இஃது ஐந்தாவது படி.

" காட்டுவித்தால் ஆரொருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே "

என்பது போன்ற அருள்வாக்குக்கள் எல்லாம் இந்த ஆன்ம தரிசனத்தைச் செய்விப்பனவாகும்.

" அறிவிக்க அன்றி அறியா உளங்கள் "

என்பது சிவஞானபோதம்.

" உணர்த்தில் உணர்வேன் உணர்த்தாயேல் நாயேன்
கணத்தும் உணரும்வகை காணேன் - உணர்த்தியென்னுள்
பூண்டமல மாயைகன்மம் போக்கிச் சிவானந்தத்
தாண்டருள்வை சொக்கநா தா "

என்றது எங்கள் குருஞானசம்பந்தர் வாக்கு.

உயிர்க்குயிராய் நின்று 'உணர்த்திவரும் சிவத்தையின்றி நமக்குச் செயல் இல்லை என்பதைப் பொதுவாக உணர்வதோடு இல்லாமல், அதனை உண்மையாகத் தெளிந்து, எல்லாம் அவன் செயலேயாகக் கண்டு, தான் செயல் அற்றிருக்கும் நிலையை அடைவதே, "ஆன்ம சுத்தி" எனப்படும். ஏனெனில், அப்பொழுதுதான், ஆன்மா எவ்வகையான குற்றமும் இல்லாததாகின்றது.

"நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

என்றதுபோன்ற அருள்வாக்குக்கள் எல்லாம், இந்த நிலையில் இருந்து எழுந்தனவேயாகும்.

"எங்கே நடத்துமோ எங்கே கிடத்துமோ
எங்கே இருத்துமோ என்றறியேன் - கங்கைமதி
சூடினான் தில்லையிலே தொந்தோமென நின்றுநடம்
ஆடினான் எங்கோன் அருள்"

என்று குருஞானசம்பந்தர் அருளியதும், இந்த அருள்நிலையில் இருந்தேயாகும்.

இஃது ஆறாவது படி. நான்கு, ஐந்து, ஆறாவது படிகளையே உண்மைநெறி விளக்கத்தின் இரண்டாவது பாடல் தெரிவிக்கிறது.

அறிவித்தால் அன்றித் தானே அறியமாட்டாததாயும், ஒன்றை அறியுமிடத்தும் அதுவாய் அதனில் அழுந்தி நிற்பதாயும் உள்ள தூல சித்தாகிய ஆன்மாக்கள், அனாதியே ஆணவ மலத்திற் கட்டுண்டு கிடப்பதை, அனாதியே அமலனாய் உள்ள இறைவன் அறிந்து, அவைகளை உய்விக்க வேண்டித் தனது சத்தியால் பல திருமேனிகளைக் கொண்டு, 'படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்து தொழில்களைச் செய்கின்றான்; அதனாலேயே உலகம் இயங்கி வருகின்றது; ஆகவே, உலகத்திற்கு அத்தகைய எல்லாம் வல்ல ஒரு முதல்வன் இருக்கின்றான் என்று உணர்வதே, 'சிவரூபம்' எனப்படும். இந்தச் சிவரூபத் தொடர்பினாலேயே, ஆன்ம

தரிசனம் கைகூடுகிறது. இதனையே அந்நூலின் மூன்றும் செய்யுள் குறிப்பிடுகின்றது. இஃது, ஏழாவது படி.

'சிவனே எல்லாவற்றிற்கும் முதல்வன்; நாம் ஒன்றிற்கும் முதல்வர் அல்லோம்' என்ற உணர்ச்சி தோன்றியபொழுது, ஆன்மாவிற்கு, 'யான், எனது' என்னும் தன்முனைப்பு ஒழியும். அந்த முனைப்பு அற்ற இடமே சிவனுக்குத் திருவடியாகும்; 'யான், எனது' என்ற முனைப்பு அற்றுவிட்டால், எவ்விடத்திலும் சிவம் தோன்றுமேயன்றி வேறு பொருள் தோன்றுது; இவ்வாறு, எங்கும் சிவமாய்த் தோன்றுகின்ற நிலையே சிவனுக்கு முகமாகும். உலகம் தோன்றுது, சிவம் தோன்றினல், முன் கண்டறியாத ஒரு பேரின்பம் ஆன்மாவிற்குத் தோன்றும். அந்த இன்பமே சிவனுக்கு முடியாவது. சிவனது திருவடி, திருமுகம், திருமுடி முதலியவைகளை, சரியையில் திருக்கோயில் முதலிய இடங்களிலும், கிரியையில் இருதயத்திலும், யோகத்தில் புருவ நடுவிலும் தரிசித்தவர்கள், ஞானத்தில் இவ்வாறு தரிசிக்கிருர்கள். இதுவே, உண்மைச் சிவதரிசனமாகும்.

குமரகுருபரரும் முருகப்பெருமானைப்பற்றிக் கூறும் பொழுது, முதலில்,

" யான் எனதுஎன் றற்ற இடமே திருவடியா
மோன பரானந்தம் முடியாக - ஞானம்

திருவுருவா இச்சை செயல்அறிவு கண்ணு
அருளதுவே செங்கை அலரா - இருநிலமே

சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே "

என்று ஞான தரிசனத்தையே முதலில் கூறி, அதன் பிறகே ஆறுமுகம் பன்னிரண்டு கைகள் முதலியவைகளையும், அன்பரகத் தாமரையின் மீதிருக்கும் தெய்வ ஒளிவடிவத்தையும், ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய் நிற்பதையும் கூறினர். பின்பு சொல்லப்பட்ட இவைகள் சரியை, கிரியை, யோகங்களில் விளங்குவனவாம். ஆகவே, மேற்சொன்ன ஞான தரிசனமே உண்மைச் சிவதரிசனமாகும்.

"ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள் ;
ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன் ;
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானும் தொழுவனே"

என்று அப்பரும், ஞானத்தால் தரிசிக்கும் உண்மைச் சிவ தரிசனத்தின் சிறப்பை நன்கு அருளிச் செய்தார். இந்நிலையில் நின்று சிவனைத் தரிசிக்கும்பொழுது, 'நான் இந்த நிலையை அடைந்துவிட்டேன்' என்று எண்ணுவதுகூடக் கூடாது. அவ்வாறு எண்ணினாலும் சிவ தரிசனம் மறைந்துவிடும். இதைத் தான், முதலிற் காட்டிய உண்மைநெறி விளக்கத்தின் நான்காம் பாடல் நன்கு விளக்குகின்றது.

'**சிவதரிசனம்**' என்னும் இஃது, எட்டாவது படி. இதனாலேயே ஆன்ம சுத்தி கிடைக்கிறது.

இச் சிவதரிசனத்தின்பொழுது பழைய வாசனை வந்து தாக்கினால் இதுநல்லது; இதுதீயது; இவர் நண்பர்; இவர் பகைவர்; இதை நான் செய்தேன்; இதை அவர் செய்தார்' என்று எண்ணி, மகிழ்ச்சியும், சினமும் அடையும் நிலை தோன்றும். அப்பொழுது அவன் அருளை மறவாது உறுதியாகப் பற்றித் தான் அவனே யாகித் தன்னை மறந்திருக்கும் நிலையினால் அச்சலனங்களை அறவே ஒழித்தல்வேண்டும். இவ்வாறு தன்னை மறந்து சிவனையே உணர்ந்து நிற்கும் நிலையே, '**சிவயோகம்**' எனப்படும். சரியை கிரியைகளுக்குப் பின்னர் வாய்ப்பது பொதுயோகம். ஞானத்தினால் வாய்க்கும் இதுவே, உண்மைச் சிவயோகமாகும்.

இஃது ஒன்பதாவது படி. இதனையே உண்மைநெறி விளக்கத்தின் ஐந்தாம்பாடல் கூறுகின்றது.

இந்தச் சிவயோக நிலையை அடைந்த ஆன்மாவைச் சிவன் வெளியே விடாது தனது திருவடியில் அடக்கி இரண்டறக் கலக்கச்செய்து, அவனது பேரா இன்பம் ஒன்றிலேயே திளைத்திருக்கச் செய்வான். இதுவே, '**சிவபோகம்**' என்று சொல்லப்படுகிறது. இதுவே, பத்தாவது படியாகிய முடிந்த நிலை. இதனையே உண்மைநெறி விளக்கத்தின் இறுதிப் பாடலாகிய

ஆறுவதுபாடல் கூறி முடிக்கின்றது. இந்தச் சிவபோகத்தையே, எங்கள் ஆதீன முதற்குரவராகிய குருஞானசம்பந்தர், 'சிவபோக சாரம்' என்று அருளிச்செய்துள்ளார்.

சாத்திரங்களில், 'உண்மை விளக்கம், உண்மைநெறி விளக்கம்' என்ற இரண்டு நூல்கள் இருக்கின்றன. இவைகளில், 'உண்மை' என்பது, தத்துவங்களையே குறிப்பனவாகும். உண்மை விளக்கம் தத்துவங்களை எடுத்து விளக்குகின்றது. உண்மைநெறி விளக்கம் தத்துவங்களின் வழியே சென்று சிவத்தை அடையும் முறையைக் கூறுகின்றது. விரிந்த பொருளாகிய இந்தத் தசகாரியங்களை, மிகச் சுருக்கமாக ஆறே பாடல்களில் விளக்குகின்றது உண்மைநெறி விளக்கம்.

'இதனைச் செய்தவர் உமாபதி சிவாசாரியார்' என்றல் மரபு. ஆயினும், இந்நூலிற் காணப்படும் வெண்பா, 'இது, சிற்றம்பல நாடிகளது மாணுக்கர், சீகாழித் தத்துவநாதர் என்பவரால் செய்யப்பெற்றது' எனக் கூறுகின்றது. சிற்றம்பல நாடிகள், முப்பது நிலைகளாக அருளிச்செய்த, 'துகளறுபோதம்' என்னும் நூலின் சுருக்கமாகவே இந்நூல் அமைந்திருத்தல் காணலாம்.

ஞானத்தின் வழியிலே படிமுறையாகச் சென்று சிவத்தை அடைவிக்கின்ற இவ்வுண்மைநெறி விளக்க நூலினை அனைவரும் எளிதில் ஓதியுணர்ந்து பயன்பெறுவார்களாக.

## தசகாரியம்

1. தத்துவ ரூபம்
2. தத்துவ தரிசனம்
3. தத்துவ சுத்தி
4. ஆன்ம ரூபம்
5. ஆன்ம தரிசனம்
6. ஆன்ம சுத்தி
7. சிவ ரூபம்
8. சிவ தரிசனம்
9. சிவயோகம்
10. சிவபோகம்



" ஞானசம்பந்த " த்தை
இருபத்துமூன்று ஆண்டுகளுக்கு முன் தொடங்கியருளிய
தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஷண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

# "பிழைபொறுத்தல்"

"செந்தமிழ்க்காவலர்"

டாக்டர், திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார்

எம். ஏ., எம். எல். சி.,

சுந்தரர் திருவொற்றியூரைவிட்டு நீங்குவதில்லை என்று சபதம் செய்து சங்கிலியாரை மணந்தார். சில ஆண்டுகள் கழிந்ததும் திருவாரூர் பற்றிய எண்ணங்கள் மனத்தில் தோற்றியதால் திருவாரூரை மறந்து பல நாட்கள் பிரிந்திருந்தமைக்காக வருந்தித் திருவொற்றியூரை நீங்க முற்பட்டார். உடனே, சபதத்தின் விளைவினால் கண் மறைந்து மூர்ச்சித்து வீழ்ந்தார். முன்செய்த சூளுரையை மறுத்ததனால் இவ்விளைவு ஏற்பட்டது என்பதையறிந்து துயர்நீங்கப் பாடுவாராயினர். "வீட்டில் பெண்டுகள் நான் ஒன்று சொன்னால், 'அழையாதே போகுருடா' என்று சொல்வார்களே அதனை நான் பொறுக்க மாட்டேன்" என்றும், "முகத்தில் கண்ணிழந்து எங்ஙனம் வாழ்வேன் முக்கண் முறையோ?" என்றும் பாடினாராயினும் கண் பெற்றிலர். "மூன்று கண் உடையவனே; அடியேன் கண் கொள்வது கணக்கு வழக்கோ? ஊன்றுகோலாவது எனக்கு அருளுதல் வேண்டும், ஒற்றியூர் உறைவானே" என்றும், "வழுக்கி வீழினும் நின் திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறுமாற்றம், என் கண்ணிற்கு ஒரு மருந்து உரையாய் ஒற்றியூர் உறைவோய்" என்றும் கூறிப் பலவாறு புலம்பியும் கண்ணும் பெற்றிலர், ஊன்றுகோலும் பெற்றிலர். பிறகு வழிச்செல்லோர் வழிகாட்டத் திருமுல்லைவாயில் சேர்ந்து அங்கே தான்படும் "துயரத்தைக் களையவேண்டும் பரஞ்சுடரே" எனப் பாடிச் சென்றுகொண்டிருந்தவர் வெண்பாக்கத்தில் ஊன்று கோல் அருளப்பெற்றார். "பிழைகளைப் பொறுத்திடுவீர்" என்றார். "அடியார்க்கு அருளவில்லை என்னும் பழி வந்து சேருவதைக்கூடப் பாராமல் என் கண்களை மறைப்பித்தீரே;" என்று கேட்டார். "குழை விரவு வடிகாதா கோயில் உளாயோ" என்று அவர் கேட்க, "உளேம் போகீர்" என்று இறைவனும் கூறினன். இவ்விடத்தில் சிந்திக்க வேண்டுவது, மக்கள் செய்யும் பிழைகளைக் கடவுள் பொறுத்திடுவராயினும் அறிந்தறிந்து மேன்மேலும் செய்யப்படும் பிழைகளைப் பொறுப்பதற்குக்

கூசுவர் என்பதாம். கடவுள் எல்லையில்லாப் பேரருள் உடையவர் ஆனதால் மும்முறைக் குற்றம் பொறுப்பார் என்பதில்லை, எழுமுறைக் குற்றம் பொறுப்பார் என்பதில்லை, எழுநூறு முறையும் பொறுப்பார் என்று சிலர் நினைப்பது உண்டு. நெஞ்சறிந்து குற்றஞ்செய்துவிட்டு இறைவன் தண்ணளிமேற் பாரத்தைப் போட்டுவிட்டுப் பொறுத்து விடுவர் என அடிக்கடி பிழைகளைச் செய்திடுவாருடைய போக்கில் சுந்தரரும் இருந்தார் என்பது,

"பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம் என்கண் மறைப்பித்தாய்"

என்று அவர் கூறியமையால் அறியப்படும். இதனால்தான் திருவள்ளுவர்,

"வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்"

என்று கூறினர். இதற்கு உரையெழுதிய பரிமேலழகர், 'அறியாது செய்த குற்றம் அல்லது அறிந்துவைத்துச் செய்த குற்றம் கழுவப்படாது' என வரைந்தார். இதனால்தான், "பொறுப்ப ரென்றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும் வெறுப்பன செய்யாமை வேண்டும்" என நாலடியார் விதிக்கிறது.

கடவுள் ஒருபக்கம் அருளுடையவராயிருப்பினும் இன்னொரு பக்கம் நியாய உணர்ச்சியோடு முறைபிறழ்ந்தாரை ஒறுக்கும் இயல்பினர். நல்ல வழியிற் செல்லும் குடிமக்களைப் பாதுகாத்து ஓம்பித் தீயவழியிற் செல்லும் மக்களை அரசன் தண்டிப்பது குற்றமாகாது என்றும், அவ்வாறு செய்தல் அவன் தொழில் என்றும் திருவள்ளுவர் கூறினர்.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்"

எனவரும் செங்கோன்மை அதிகாரச் செய்யுளில் அவர் கூறியிருப்பது இவ்வுலக வேந்தனுக்கு ஒக்குமாறுபோல வேந்தர்தம் வேந்தருக்கும் ஒக்கும். குடிமக்களில் தவறிழைப்போர்க்கு அரசன் தண்டனை தருதல் அவரைத் தூயராக்கும் எண்ணத்தால் என்பர். அவ்வாறே மக்களிடம் காணும் குற்றங்களுக்காக

அவர்களை இறைவன் தண்டித்தால் அதனைக் கொடுமையெனக் கூறுதல் ஆகாது. குற்றம் காரணமாக அவர்களைக் கண்டித்துத் தூயராக்கும் நோக்கத்தால் அத்தண்டனை தரப்படுவது கடவுளின் செங்கோல்முறை என்று கூறுவதும் பொருந்தும். கொடுத்த தண்டனை போதும் என்ற எண்ணம் இறைவனுக்கு உண்டாகும்பொழுது, பெற்ற தண்டனையால் உளந்திருந்தி நைந்து இனி அக்குற்றஞ் செய்யவில்லை என்ற உறுதிப்பாட்டோடு ஒருவர் இருக்கிறார் என்பதை இறைவன் அறிந்து கொள்ளுகிறபொழுது, தான் கொடுத்த தண்டனையினின்று விடுவிக்கக் கருதுவார். அதனால்தான், காஞ்சிபுரத்தில் சுந்தரர்க்கு இடக்கண் திரும்பி அளிக்கப்பட்டது. சுந்தரர் குறை நயப்பித்ததை,

"விண்ணார்வார் அமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட
கண்ணாளா! கச்சியே கம்பனே! கடையானேன்
எண்ணாத பிழைபொறுத்திங் கியான்காண எழிற்பவள
வண்ணா! கண் ணளித்தருளாய் எனவீழ்ந்து வணங்கினார்"

என்ற வகையில் சேக்கிழார் எடுத்துரைத்தார். பிழைபொறுத்துக் கண்ணருளல் வேண்டுமென்று பன்முறை கதறிக்கதறி அழுத பின்னர் ஒரு கண் பெற்றார் சுந்தரர். கச்சியேகம்பநாதரைக் காண ஒரு கண்ணாவது பெற்றேன் என்று கருதிப் பரவசமாயினார் சுந்தரர். இறைவனை, "பருகா இன்னமுதத்தைக் கண்களால் பருகுதற்கு மருகும் ஆர்வத்தோடு மற்றைக் கண்ணையும் தருவாய்" என வணங்கிப் பலமுறை முறையிட்டார் சுந்தரர். சுந்தரர் தாம் செய்த சபதத்தை நிறைவேற்றாததால் கண்ணிழந்தமையைத் தெளிவாக உணர்ந்துள்ளார். ஆதலினால், கண்ணைக் கெடுத்தது இறைவன்தான் என்பதை உணர்ந்திருக்கிறார். ஆதலினால் அவரே அதனை மீட்டும் அருளுதல் வேண்டுமென்ற உறுதியோடிருந்தார். பிறர் எவரையும் வேண்டாமல் மீளா அடிமையாக அவர் ஆட்பட்டிருந்தமை அவர் வரலாற்றினால் தெளிவாகிறது. மற்றைக் கண்ணையும் தருக என வேதனையோடு அவர் செய்த முறையீட்டிற்கு இணங்கிக் கருணைகொண்டு திருவாரூரில் மற்றைக் கண்ணையும் இறைவன் ஈந்தருளினார். கண்பெற்ற பயனால், செழுந்தண் பவளச் சிவக்கொழுந்தின் அருளைப் பருகித் திளைப்பாராயினார் சுந்தரர்.

# தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

( மலர் 23, இதழ் 12, பக்கம் 690 இன் தொடர்ச்சி )

7. வினைச்சொல்பற்றிய மரபு:

இக்காரியத்தினைச் செயல் வேண்டும் என்று சொல்லப்படும் முற்றுச்சொல்; அக்காரியத்தினைச் செய்வான் தன்னிடத்தும், அவன் செயலை வேண்டியிருப்பான் பிறனொருவனிடத்தும் என்ற இரண்டு இடத்தும் நிலைபெறும் பொருண்மை யுடையதாம், (எ-டு) 'ஓதல் வேண்டும்' என்புழி வேண்டும் என்னும் முற்றுச் சொல் அவ்வோதுதற்குக் காரணமான தன்னிடத்தும், அவன் ஓதுதலை விரும்பும் தந்தையாகிய பிறனிடத்தும் ஆயவாறு கண்டு கொள்க.

ஒரு வினைச்சொல் ஒரு பொருள் உணர்த்துதலே மரபு. அங்ஙனமன்றி இச்சொல் தான் பிறர் என்னும் ஈரிடத்திற்குரிய பொருளில் வருதல் வழுவாயினும் அமைகவென வழுவமைத்த வாறு (46).

வற்புறுத்துதற்காக வருவதும் வினாவெழுத்தினை ஈற்றிலே கொண்டு நிற்பதுமான வினைச்சொல் உடன்பாட்டினை உணர்த் தாது எதிர்மறுத்து உணர்த்துதலும் உண்டு என்பதாம். (எ-டு) 'யான் வைதேனோ' என வரும். வைதேனோ என்பதில் வைதல் வினைச்சொல்லும் ஓகாரம் வினாச்சொல்லுமாகும். இவ்வினாவினையுடைய வினைச்சொல் வைதிலேன் என எதிர் மறைப் பொருளை உணர்த்துதற்கும் உரியதாம்.

ஒரு வினைச்சொல் ஒரு பொருள் உணர்த்துதலே மரபு. அங்ஙனமன்றி உடன்பாட்டிற்குரிய இவ்வினாவுடை வினைச்சொல் எதிர்மறைப்பொருளுணர்த்துதல் வழுவாயினும் அமைகவென வழுவமைத்தவாறு (47).

செயப்படு பொருள்தானே வினைமுதல்போலக் கூறப்படுதலும் உண்டு. (எ - டு) ' திண்ணை மெழுகிற்று ' என்புழி மெழுகுதல் தொழில் வினை முதலால் செய்யப்பட்டிருக்க அதனைத் திண்ணையே செய்ததுபோலக் கூறுதலின் செயப்படு பொருளைச் செய்தது போலக் கூறியதாயிற்று.

வினைமுதல் வேறு, வினைமுதலின் தொழிலது பயனை அடையும் செயப்படு பொருள் வேறு. ஆதலின் செயப்படுபொருளை வினைமுதல் போலச் சொல்லுதல் வழுவேயாம். ஆயினும் அமைகவென வழுவமைத்தவாறு (49).

இந்நூற்பாவின் இறுதியில் உள்ள இருசீர்களை பற்றிச்

" செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கினுள் உரித்தே "

(பொது : 49)

என நன்னூலார் கூறியுள்ளார்.

## 7. இடையியல்

**1. முன்னுரை :**

பெயர், வினை, இடை, உரி என்ற நான்கு சொற்களையும் நிறுத்தமுறையானே உணர்த்திவரும் ஆசிரியர் மூன்றும் முறைமைக்கண் நின்ற இடைச்சொல்லிலக்கணத்தை இவ்வியலில் உணர்த்துகின்றாராதலின் இது இடையியலெனப் பெயர் பெற்றது. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.

**௨. இடைச் சொல்லின் பெயர்க்காரணம் :**

இடைச்சொற்கள் மொழிக்கு முன்னும் பின்னும் வருமேனும் பெரும்பான்மையும் அதற்கிடையே வருதலின் இடைச்சொல்லாயிற்று என்பர் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும்.

பெயரும் வினையும் இடமாக நின்று பொருளுணர்த்தலின் இடைச்சொல்லாயிற்று என்பர் தெய்வச்சிலையார். இவர் கருத்தினையேற்று இதற்கு விளக்கமும் தந்தனர் சங்கர நமச்சிவாயர். அவர் கூறுமாறு :

"முதனூலின் வழியாக நடக்கும் நூலை அங்ஙனங் கூறுது வழிநூலென்றுற்போலப் பெயர் வினைகளின் இடமாக நடக்கும் சொல்லை அங்ஙனங் கூறுது இடைச்சொல்லெனக்கூறினுர். அங்ஙனமாயின் இடமென இயற்சொல்லாற்கூறுது இடையெனத் திரிசொல்லாற் கூறியதென்னையெனின், இயற்சொல்லாற்கூறின் இடப்பொருளை உணர்த்துஞ் சொல்லெனப்படுமாதலின் அதனேடு இதற்கு வேற்றுமை தோன்றற்கென்க".

எனவே தெய்வச்சிலையார் கருத்தின்படி இடைச்சொற்கள் பெயர் வினையின் இடமாக நின்று பொருளுணர்த்துமெனவே, பெயரினிடமாக நின்று பெயர்ப்பொருளை யுணர்த்துதலும், வினையினிடமாக நின்று வினைப்பொருளை யுணர்த்துதலுமன்றி அவ்விரண்டின் இடமாக நின்று தத்தம் பொருளையுணர்த்தும் இடைச்சொற்களும் உண்டென்பது பெற்றும்.

"இடைச்சொற்கள், பெயர்ச்சொல் வினைச்சொற்களுமாகாது அவற்றின் வேறுமாகாது இடை நிகரனவாய் நிற்றலின் இடைச் சொல்லெனக் காரணக்குறி பெற்றன. இது பாலைத்திணை நடுவு நிலைத்திணையெனப் பெயர் பெற்றதுபோலுமென்க" என்பர் சிவஞான முனிவர்.

## 3. இடைச்சொல்லின் இலக்கணம்:

இடைச்சொற்கள் தமக்கெனப் பொருளுடையன அல்ல. பெயர் வினைகளைச் சார்ந்து நின்று அவற்றது பொருளையே வெளிப்படுத்தி நிற்கும் (1) இவ்விடைச் சொற்கள் தம்மால் சாரப்படும் பெயர் வினையாகிய சொற்களுக்கு முன்னும் பின்னும் வருதலும், தத்தம் ஈறு திரிந்து வருதலும், ஓரிடைச் சொல்லுடன் பிறிதோரிடைச் சொல் சேர்ந்து வருதலும் ஆகிய இயல்பினை உடையனவாம் (3). தனித்தியலின்றிப் பெயரினும் வினையினும் பின் முன் ஓரிடத்து ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச் சொல் என நன்னூலாரும் கூறுவர் (நன். இடை : 1)

## 4. இடைச்சொல்லின் வகைகள் :

சொற்கள் ஒன்றேடொன்று புணர்கின்றபொழுது அவற்றின் பொருள்நிலைக்கு உதவிசெய்து வருவனவாகிய சாரியைகளும், வினைச்சொற்களில் காலங்காட்டும் உறுப்பாய்வரும் இடை

நிலைகளும் பால்காட்டுவனவாய் வரும் விகுதிகளும், வேற்றுமை உருபுகளும், தாம் சார்ந்த பொருளை வேறுபடுத்திவரும் * அசைநிலைகளும், செய்யுட்களில் இசை நிறைத்தலே பொருளாக வரும் இசைநிறைச் சொற்களும், கூறுவார் தாம்தாம் குறித்த குறிப்பினாலே அவரவர் குறித்த பொருளை விளக்கி நிற்கும் சொற்களும், ஒப்புமையை உணர்த்துகின்ற உவம உருபுகளும் என இடைச் சொற்கள் ஏழு வகைப்படும் (2).

இவற்றுள் சாரியைகள் எழுத்ததிகாரத்துப் புணரியலில் 120-ஆம் நூற்பாவில் கூறப்பட்டன. கால இடைநிலைகளும் விகுதிகளும் வினையியலிற் கூறப்பட்டன. வேற்றுமை உருபுகள் வேற்றுமை இயலில் விளங்கக் கூறப்பட்டன. உவம உருபுகள் உவம இயலிற் கூறப்படும். எஞ்சிய அசைநிலை, இசைநிறை, தத்தம் குறிப்பிற் பொருள்செய்குவன ஆகிய மூன்றும் இவ்வியலிற் கூறப்படும். அம்மூன்றனுள்ளும் தத்தம் குறிப்பிற் பொருள் செய்குவன பொருளுணர்த்துதற் சிறப்பும் மிகுதியும் உடைமையான் முதற்கண் கூறப்படும்.

(தொடரும்)

---

குறிப்பு: * அசைநிலை - வேறுபடுத்தி வருஞ்சொற்கள்,


குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம்: நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A. B. L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

(மலர் 23, இதழ் 12, பக்கம் 702 இன் தொடர்ச்சி)

தென்னவனின் சிறுமலை எனப்படும் மலையின் வளத்தை இளங்கோ காட்டச் சிலம்பில் காண்கிறோம். மலைச்சாரலில் விளையும் நெல் வளம்பெற்றுத் திகழ்கிறது. அறைக்கும் பருவத்திலே இருக்கிறது கரும்பு. சொல்லத்தக்க தினையும், கொழுவிய வரகும், வெள்ளுள்ளியும் விளங்கு மஞ்சளும், கவலையும் கமுகும் வாழையும் வளர்தெங்கும் மாவும் பலவும் மலிந்திருக்கின்றன.

"ஐவன வெண்ணெலும் அறைக்கட் கரும்பும்
கொய்பூந்தினையும் கொழும்புனவரகும்
காயமும் மஞ்சளும் ஆய்கொடிக் கவலையும்
வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்
மாவும் பலாவும் சூழடுத் தோங்கிய
தென்னவன் சிறுமலை" (காடுகாண்காதை 80-85)

சேரநாட்டு மலைவளத்தைக் காட்சிக் காதையில் செப்புகிறார். வெள்ளி மாடத்து வேண்மாளுடன் இருந்த வேந்தன் செங்குட்டுவன், "மஞ்சுசூழ் சோலைமலை காண்குவம்" எனக் கூறிப் புறப்படுகிறான். மலைவாழ் குறவர் மன்னவன் அடி பணிந்து மலைப்பல்தாரம் அளிக்கின்றனர். களிற்றின் கோடு, காரகில் திரள்; மான்மயிர்க்கவரி; மதுவின்குடம், சந்தனம், சிந்துரம், அஞ்சனம், அரிதாரம், ஏலம், இருங்கறி, கொழுங்கொடிக் கவலை; தெங்கு, தேமா, படலை; பலா; காயம்; கரும்பு; கமுகின் குலைத்தாறு; வாழைக் கனித்தாறு; அம்மம்மா எத்துணைப் பொருள்கள்; எத்துணைப் பொருள்கள்?

"யானை வெண்கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக்குறையும் சிந்துரக் கட்டியும்

அசனத் திரளுஞ்ம் அணியரிதாரமும்
ஏலவல்லியும் இருங்கறி வல்லியும்
கூவைநாறும் கொடுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனும் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமும் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செங்குலத்தாறும்
பெருங்குலை வாழையின் இருங்கனித்தாறும்"

(காட்சிக்காதை 37-47)

வெளிநாட்டு வாணிகத்தால் தமிழ்நாட்டுக்குச் செல்வத்தைத்தரும் பொருள்களுள் மிளகு மிக முக்கியம் வாய்ந்ததாம். கலத்திலே பொன்னை ஏற்றிவந்து விலையாகத்தந்து கறியினைக் கொண்டு சென்றனர் யவனர் என்று இலக்கியம் பகர்கிறது. அயல்நாடுகளுக்கு ஏராளமாக அனுப்பும் அளவிற்குத் தமிழகத்து மலைகளில் மிளகுக் கொடிகள் செழித்து வளர்ந்தன.

"கறிவளர் அடுக்கம்" (குறுந்-288)

"கறிவளர் சிலம்பு" (ஐங்கு. 243), (சிலம்பு. 28. 114)

"கறியிவர் சிலம்பு" (அகம். 112), (கலி. 12)

என்பனபோன்ற அடிகள் தமிழ்நாட்டு மலைகளின் மிளகு வளத்திற்குச் சான்றுபகரும்.

மலைபடு திரவியங்களில் ஆரமும் அகிலும் குறிப்பிடத்தக்கவை. குடமலைப் பகுதியில் இவையிரண்டும். விளைவதைக் கடியலூர் உருத்திரங் கண்ணனர்,

"குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்"

(பட்டினப். 188)

என்று குறிப்பிடுகிறார். சிலம்பில், "குடமலைப்பிறந்த கொடும்பல்தாரம்" என்று பேசப்படுகிறது. மலை உச்சியில் வளர்ந்திருக்கும் அகிலையும் ஆரத்தையும், பாய்ந்துவரும் அருவி பறித்து வருவதை முன்னர்க் கண்டோம்.

பொதியமலைச் சந்தனம் அக்காலத்தே புகழ்பெற்று விளங்கியது. பொதியமலைச் சந்தனமும், புகழும் தென்கடல் முத்தும் உடையவன் போர்ச்செழியன் என்பதைப் புறத்தில்,

" வரைய சாந்தமும் திரைய முத்தமும்
இமிழ்கடல் முரசம் மூன்றுட னுளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே " (புறம் 58)

என்னும் அடிகளால் அறியலாம்.

" தென்மலைப்பிறந்த சந்தனம் " என்று அந்திமாலைச் சிறப்புக் காதையிலும், ஆரமும் அகிலும் வளர்வதால், " பொறையுயர் பொதியல் " என்று வேனிற்காதையிலும் இளங்கோவடிகள் கூறுதல் காண்க. பொதியமலைச் சந்தனம் அகம் 340 ஆம் பாட்டில் " குடபுல உறுப்பு " என்று குறிக்கப்படுகிறது.

சந்தன மரங்கள் மண்டி வளர்ந்த காரணத்தால் தமிழ் நாட்டார் அவற்றை விறகாக எரித்தனர். ஆரம் எரித்துச் சோறுசமைத்ததைச் " சாந்த விறகின்னுவித்த புன்கம் " என்ற அடி விளக்கும். பறம்புமலையில் குறத்தி ஆரத்தை விறகாகப் பயன்படுத்துகிருள். எரிக்கப்பட்ட சந்தனக்கட்டையிலிருந்து எழும் புகை அயல் வளர்ந்த வேங்கைப்பூங்கொம்பில் படர்ந்து மணக்கிறது.

" குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆரமாதலின் அம்புகை அயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும் " (புறம் 108)

தமிழகத்தில் மலைவளம் சிறந்திருந்தது போலவே தண்டாக் கடல் வளமும் சிறப்புற்றிருந்தது. தமிழ்நாட்டு நெய்தல் வளத்தைச் சான்றோர் பாக்களில் பரக்கக் காணலாம். குளிர்ந்த கழிகளில் சங்குகள் கிடந்து ஒலிக்கின்றன. அங்கு வாழ்வோர் அழகு முத்துக்களோடு அரும்பவளக் கொடிகளையும் எடுத்துக் கொள்கின்றனர். இத்தகுநெய்தல் வளத்தைப் பதிற்றுப்பத்தில் (30) பார்க்கிறோம். முந்நீர் தரும் பண்டங்கள் யாவும் கொண்ட நலங்கிள்ளியின் நாட்டை உறையூர் முதுகண்ணன் சாத்தனுர் " கடல் பல் தாரத்தநாடு " (புறம் 30) என்று வருணிக்கிருர்.

முத்தும் உப்பும் கடல்தரும் பொருள்களும் முக்கிய மானவை. உணவுப்பண்டமான உப்பு, கடற்கரையோரங்களில் பரதவரால் எடுக்கப்பெற்றது. உப்பெடுக்கும் உவர்நிலத்தை "உப்புவிளை கழனி" (குறுந். 269) என்று கல்லாடனர் குறிப் பிடுகின்றார். கழனியில் நெல் விளைகிறது, கழியில் உப்பு விளை கிறது. கழனியில் உழுது விதைத்தால்தான் நெல்லைக் காண லாம். ஆனால் உவர்நிலத்தில் உப்பு கிடைப்பதற்கோ உழத் தேவையில்லை; எதையும் விதைக்க வேண்டியதில்லை. எனவே தான் அம்மூவனர்,

"இருங்கழிச் செறுவின் உழாஅதுசெய்த
வெண்கல்லுப்பு" (அகம் 140)

என்று கூறுகிறார். உவர்நிலத்தில் உப்பெடுப்பார்,

"உவர்விளை உப்பின் உழாஅ உழவர்" (புறம் 331)

என்று பேசப்படுகின்றனர். உப்பு வாணிகம் செய்வார் உமணர் என்று அழைக்கப்படுவர். இவர்கள் உப்பை வண்டியில் ஏற்றி ஊர்ஊராகச் சென்று வாணிகம் செய்தனர்.

[ தொடரும் ]


## "ஞானசம்பந்தம்"

**கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் இதழ்**

**திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற் றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையானது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.**

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 2—25 வெளிநாடு ரூ. 3—00

**செயலாளர்,**

**"ஞானசம்பந்தம்" காரியாலயம்**

**தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்,**

**தஞ்சை மாவட்டம்.**

# சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 23, இதழ் 12. பக்கம் 694 இன் தொடர்ச்சி)

दधि तत्पुरुषेणैव मधुवै वाममंत्रतः ।
गुळंचाघोर मंत्रेण मूलेनैवेक्षु दण्डकम् ॥ 444

फलानीशान मंत्रेण कन्दानि मूलमंत्रतः ।
मूलेन चन्दनं चैव कस्तूरी कृष्णगन्धकम ॥ 445

தத்புருஷ மந்திரத்தால் தயிரையும், வாமதேவமந்திரத்தால் தேனையும், அகோர மந்திரத்தால் வெல்லத்தையும், மூல மந்திரத்தால் கரும்பையும், ஈசான மந்திரத்தால் பழங்களையும், மூல மந்திரத்தால் கிழங்கு, சந்தனம், கஸ்தூரி, புனுகையும் ஹோமம் செய்யவேண்டும்.

गोरोचनां च काश्मीरं कुङ्कुमं मृगनाभिकम् ।
हिमतोयं च कर्पूरं सर्वं च जुहुयात्क्रमात् ॥ 446

बीजमुख्यैश्च ह्रीबेर मुशीरं चैव गुग्गुलुम् ।
दशाक्षरेण पुष्पाणि बिल्वं पाशुपतेन च ॥ 447

अघोरेणतु तांबूलं वासनाढ्य संयुतम् ।
अन्यानि होमयोग्यानि मूलेनैवतु होमयेत् ॥ 448

கோரோசனை, ஜவ்வாது, குங்குமப்பூ, புனுகுசட்டம், பன்னீர், கர்ப்பூரம் இவைகளை வரிசையாக மூலத்தினாலேயே ஹோமம் செய்யவேண்டும். வெட்டிவேர், விளாமிச்சை, குங்கிலியம், இவைகளை பீஜமுக்யம் என்ற மந்திரத்தால் ஹோமம் செய்யவேண்டும். புஷ்பங்களை தசாக்ஷர மந்திரத்தால் ஹோமம் செய்யவேண்டும். வில்வத்தை பாசுபத மந்திரத்தால் ஹோமம்

செய்யவேண்டும். வாசனைத்திரவியங்களுடன்கூடிய தாம்பூலத்தை அகோர மந்திரத்தினால் ஹோமம் செய்யவேண்டும். இங்கு கூறப்படாத மற்ற ஹோமத் திரவியங்கள் யாவற்றையும் மூல மந்திரத்தால் ஹோமம் செய்யவேண்டும்.

हव्यंप्रति विशेषेण व्याहृतिं च पुनः पुनः ।
पूर्वादि वायुकुण्डान्तं होमकर्म समाप्य च ॥ 449

पूर्णाहुतिं ततः कृत्वा व्याहृत्या च हुनेत्क्रमात् ।
धूपदीपौ ददेत्पश्चात् तदन्ते मेखला त्रये ॥ 450

तत्तत्स्व नाममंत्रेण लोकेशादि बलिं क्षिपेत् ।

ஒவ்வொரு திரவிய ஹோமத்தின் முடிவிலும் வியாஹ்ருதி ஹோமம் செய்யவேண்டும். கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு, அக்னி, ஈசானம், நைருதி, வாயு என்ற அக்னி விபஜன ஸ்தாபன முறைப்படி ஹோமம் செய்து முடித்து பூர்ணாகுதி செய்து வியாஹ்ருதி ஹோமம் செய்து தூபம் தீபம் கொடுத்து இந்திரன் முதலானவர்களுக்குப் பலிபோடவேண்டும்.

कुण्डपार्श्वेतु सर्वेषां स्वदक्षे बलिमाचरेत् ॥ 451

पुरुषादि वायुकुण्डान्तं कुण्डबाह्ये बलिंक्षिपेत ।
नाडीसन्धान मार्गेण तत्तत्कुण्डाधिदेवताम् ॥ 452

सकुशाक्षत पुष्पेण संग्राह्य देशिकोत्तमः ।
शिवकुण्डगताग्निस्थ शिवे संयोजयेत्क्रमात् ॥ 453

பலிபோடுவது அந்தர்பலி பஹிர்பலி என்று இரண்டு. பஹிர்பலியை குண்டங்களின் மேகலையில் போடவேண்டும் அந்தர்பலியை குண்டத்தின் பக்கத்தில் ஆசாரியனுடைய தக்ஷ பாகத்தில் போடவேண்டும். இம்முறைப்படி தத்புருஷ குண்டம் முதல் வாயுகுண்டமீறாகவுள்ள குண்டங்களிலும் மேகலைகளில் பலிபோட்டு, அந்தர்பலியாக ஆசாரியன் தனது வலது பாகத் தில் மண்டலம் அமைத்து அதில் பலிபோடவேண்டும். அதன் பிறகு நாடீ சந்தானம் என்ற முறையால், தர்ப்பை அக்ஷதை புஷ்பங்களுடன் ஆசாரியன் இதுவரையில் ஹோமம் செய்த

ஹோம மந்திரங்களை அதனதன் சங்கியையுடன் அந்தந்த குண்டத்தினின்றும் ஆகர்ஷணம் செய்து ப்ரதான குண்டத்தி லிருக்கும் அக்னியுடன் சேர்க்கவேண்டும்.

सर्वातोद्य समायुक्तं वेदघोष समन्वितम् ।
महापूर्णाहुतिं हुत्वा व्याहृत्या जुहुयात्ततः ॥ 454

प्रदर्श्य धूपदीपादी नन्तर्बाह्य वलिं क्षिपेत् ।
श्रोत्राभिवन्दनं कृत्वा क्षमस्वेत्यभिधाय च ॥ 455

ஸகலமான வாத்ய கோஷங்களுடனும், வேத கோஷங்க ளுடனும் மஹா பூர்ணுகுதி செய்து வ்யாஹ்ருதிஹோமம் செய்து தூபம் தீபம் அந்தர்பலி பஹிர்பலி செய்து சுரோத்ர வந்தனம் செய்து க்ஷமாபணம் தெரிவிக்கவேண்டும்.

सकलीकरणं कृत्वा जपंकृत्वा समर्पयेत् ।
तत्तत्कुण्डगताग्निं च तत्तत्कुण्डेषु रक्षयेत् ॥ 456

अथवाऽग्निंच संग्राह्य शिवकुण्डे नियोजयेत् ।

ஸகளீகரணம் செய்துகொண்டு ஜபம்செய்து ஸமர்ப்பணம் செய்யவேண்டும் (ஸகளீகரணம் என்பது அங்கநியாஸம் கர நியாஸம் இரண்டும் சேர்ந்த நியாஸம்) அந்தந்த குண்டங் களிலிருக்கும், அக்னியை அதாவது ஆஹவநீயம் முதலானதை அந்தந்தக் குண்டங்களிலேயே ரக்ஷிக்கவேண்டும் அல்லது அந்தந்த குண்டாக்னியை ஆகரிஷித்து ப்ரதான குண்டத்தில் சேர்த்துவிடவேண்டும்.

उद्धानेत्वासने क्रोधे क्षुधे निष्ठीवनेपि च ॥ 457

वायुचारे भयोत्पन्ने भाषणे चाप्यदीक्षितौ ।
श्लेष्मोद्गारे च संतापे क्रियाविस्मृति संभवे ॥ 458

मन्त्रोक्त मंत्रकार्येपि व्याहृत्याहुतिमाचरेत् ।

ஹோமம் செய்யும் நடுவில் எழுந்திருத்தல், வேறு நகர்ந்து உட்காருதல், கோபித்தல், தும்மல், காரிஉமிழ்தல், அபானவாயு விடுதல், பயம்உண்டாதல், அதீக்ஷிதரிடம் பேசுதல், கபத்தை

உமிழ்தல், பச்சாத்தாபப்படுதல், நடத்தப்படும் கிரியையில் மறதி உண்டாதல், மந்திரோக்தமந்திர காரியத்திலும் ஏற்படும் மறதி, இவைகளில் அதன் பிராயச்சித்தமாக வியாஹ்ருதி ஹோமம் செய்யவேண்டும்.

ततो कुंभान्तिकं गत्वा वेद्या दक्षिणभागतः ॥ 459

पुष्पांजल्या पूजयित्वा तत्व त्रितय मंत्रतः ।
धूपदीपौ पुरःकृत्वा महानैवेद्यमाचरेत् ॥ 460

இவ்வாறு ஹோமத்தை முடித்து கும்பத்தின் அருகில் சென்று வேதிகையின் தென்பாகத்தில் நின்றுகொண்டு, வேதிகை மேலிருக்கும் கும்பகதரான சிவனுக்குப் புஷ்பாஞ்சலிசெய்து. பூஜைசெய்து ஆன்மதத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவம் என்ற மூன்று தத்துவங்களையும் பூஜித்து தூபதீபம் கொடுத்து மஹாநிவேதனம் செய்யவேண்டும்.

चतुष्पलं चांजलिकं चतुरंजलि प्रस्थकम् ।
अढकं तच्चतुष्कंस्याद्रोणं तस्य चतुर्थकम् ॥ 461

द्विद्रोणादष्ट द्रोणान्तं नित्यमेवं विधीयते ।
नैमित्तिक मष्ट द्रोणात्तु भारं च द्वादशान्तकम् ॥ 462

प्रार्थिताभिश्च संख्याभिः याभिस्ताभिश्च काम्यकम् ।
एवं क्रमेण नैवेद्यं दापयेद्देशिकोत्तमः ॥ 463

நான்குபலம் கொண்டது ஒரு அஞ்சலி, நான்கு அஞ்சலி ஒரு ப்ரஸ்தம். நான்கு ப்ரஸ்தம் (படி) ஒரு த்ரோணம். (இரண்டு மரக்கால்) ஆகவே, நித்யத்தில் நான்கு மரக்கால் அரிசி முதல் 16 மரக்கால் அரிசி வரையில் பாகம் செய்யவேண்டும். நைமித்திகத்தில் 16 மரக்கால் முதல் ஒருபாரம் வரையில் பாகம் செய்யவேண்டும் (ஒருகலம்) காம்யத்தில் வேண்டிக்கொண்ட அளவு நைவேத்யம் பாகம் செய்யவேண்டும். இந்த முறைப்படி நைவேத்யம் தயார் செய்யவேண்டும்.

[ தொடரும் ]

# சொக்கன் கோயிலா?

"பல்கலைச்செல்வர்"

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

எம். ஏ. பி. எல்., எம். ஓ. எல்.

மதுரைக்காஞ்சியில் மதுரையை மாங்குடி மருதனார் புனைந்து உரைக்கின்றார். அங்கே அந்தணர் பள்ளியும் சமணர் சேக்கையும் இருந்தனவாகக் கூறுகிறார். ஆனால் கடவுட் பள்ளி என்று ஒன்றும் கூறுகிறார். அதனைப் பௌத்தர்கள் பள்ளியென்று நச்சினார்க்கினியர் பொருள் கொள்ளுகின்றார். அவ்வாறு பொருள் கொள்ளாமற் போனால், மதுரையில் பௌத்தர்களுடைய பள்ளியைக் கூறாது விட்டதாகும்.


ஆனால் அதற்கு முன்னே "கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி ஆடுதுவன்று விழவின் நாடு ஆர்த்தன்றே" என்று புலவர் பாடுகிறார். திருவிழாவினை ஏழுநாள் அளவில் செய்து முடிப்பதும் உண்டு என்று தெரிகிறது. திருவிழாவில் கடைசி நாளைத் 'தீர்த்தவாரி' என்று இப்பொழுதும் வழங்குகிறார்கள். "கழுநீர்" என்பது "தீவினையைக் கழுவுதற்குக் காரணமான தீர்த்த நீர்" என்றே நச்சினார்க்கினியர் பொருள் கொள்ளுகிறார். திருநாவுக்கரசர் "தீர்த்தமாம் அட்டமிமுன் சீருடை ஏழு நாளும், கூத்தராய் வீதிபோந்தார்" என்று பாடுவதால் ஏழுநாள் அளவில் திருவிழாக் கொண்டாடுதலும் மரபென்று விளங்குகிறது.

இந்தத் திருவிழாவைக் காண்பதற்குப் பலர் கூடுகிறார்கள். திருவிழாவில் கடவுள் எழுந்தருளும் போது கொடிகளை எடுத்தலும் இயல்பு; நிலா முற்றத்திலிருந்து பெண்கள் விழாவைப் பார்க்கும்போது கொடிகள் அவர்கள் முகத்தை மறைக்கின்றன. இவ்வாறு காற்றிலே கொடியசையும்போது அவர்களுடைய முகம் மறைவது போலத் தோன்றுகிறதாம். அப்போது ஏழாம் நாள் முடிவில் எழுந்த அந்த அந்திவிழாவில் வாத்தியங்களை ஒலிக்கின்றார்கள். அந்த ஒளி தெய்வங்கட்குத் தரும் பலியோடு எழுவதாகும். இங்கும் அந்த ஏழுநாள் விழாவின் தொடர்பையே



ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி

திருக்கடவூர்



ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி

காண்கிறோம். ''மாசற விளங்கிய யாக்கையர்'' என்று சுற்றுப் புறத்தெய்வங்கள் பலி பெறுவதைப் புலவர் குறிக்கின்றார். ''மாசற விளங்கிய யாக்கையர்'' என்ற இந்தத் தொடருக்குத் ''தீர்த்தமாடிய வடிவினையுடையராய்'' என்றே நச்சினார்க்கினியர் பொருள் எழுதுகிறார். இவர்கள் தீர்த்தவாரியில் தீர்த்த மாடியவர்கள் என்றே கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு வாத்தியம் ஒலிக்கும்போது பேரிளம் பெண்டிர் தம்மை மணந்த கணவரையும் தாங்கள் பெற்ற பிள்ளைகளையும் எடுத்துக் கொண்டு செல்கின்றார்கள். பூவும் புகையும் கொண்டு வணங்கி இவ்வாறு இவர்கள் பயபக்தியோடு காத்துவரும் கடவுட் பள்ளி என்று அந்தக் கடவுட் பள்ளியைப் புலவர் பாடுகிறார்.

அந்திவிழாவில் பூசைக்காக வாத்தியம் ஒலிப்பது கேட்டுப் போகின்ற இந்தக் குடும்பம் அந்தப் பூசையைத்தானே பார்க்கப் போகும். அப்படியானல் அந்தக் கடவுட் பள்ளி அந்தக் கடவுளின் ஆலயமாகத்தானே இருத்தல் வேண்டும். எந்தக் கடவுளின் கோயிலாக அது இருக்கமுடியும்? எந்தக் கடவுளுக்காகத் திருவிழா எடுத்தார்களோ அந்தக் கடவுளின் கோயிலாகத்தான் அது இருக்க முடியும். எந்தக் கடவுளுக்கு விழா எடுத்தார்கள்? பரிவார தெய்வங்களை ''மாசற விளங்கிய யாக்கையர்'' என்று கூறினாலும் அவர்களுக்குத் தலைவர் யார் என்பதையும் மாங்குடி மருதனார் கூறுகிறார். எனவே, அந்தத் தலைவருக்குத்தான் இந்த ஏழுநாள் திருவிழா நடந்திருத்தல் கூடும். 'நீரும் நிலனும் தீயும் வளியும் மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய ஒருவனே' அந்தக் கடவுள். அதாவது பஞ்சபூதங்களையும் - எனவே உலகத்தையே படைத்த கடவுளையே புலவர் இங்குக் குறிக்கிறார். ஆனால் வைணவர் என்றும் சைவ ரென்றும் பிரிந்து நிற்கின்றவர்கள் தங்கள் தங்கள் கடவுள்களின் பெயர்களையே அவ்வாறு படைத்த கடவுள்களாகக் கூறுவார்கள் அன்றோ? எனவே, புலவர் மேலும் சென்று, ''மழுவாள் நெடியோன்'' தலைவனாக என்று விளக்குகிறார். இங்கு 'மழுவாள் நெடியோன்' யார்? பின்னே மாயோனது ஓண நாள் விழாவும் கூறப்பெறுகிறது. ஆனால் அந்த விழாவின் போது வீரர்களின் ஆரவாரமே விளக்கப் பெறுகிறது. 'நெடியோன்' என்பதாலே மட்டும் இங்குக் குறிக்கப் பெறுபவன் மாயோன் என்றுகூறி ஓணவிழாவும் அந்திவிழாவும் ஒன்றென்று கூறுவதற்கில்லை. மழுவாள் என்ற குறிப்போ சிவனுக்கே பொருந்தும். ''கையது கணிச்சியோடு மழுவே'' என்று அகநானூற்றின் கடவுள் வாழ்த்தே பாடுகிறது. அகநானூற்

றில் (220) "மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்" என்ற தொடர் வருகிறது. ஆனல் அங்கே பரசுராமனையே குறிப்பது போலத் தோன்றுகிறது. பரசுராமனுக்குத் திருவிழா எடுக்கும் வழக்கமில்லை. எனவே, மதுரையில் கோயில் கொண்டெழுந் தருளியிருக்கும் திருவாலவாயுடையாரின் திருவிழாவே இந்த விழா எனக்கொண்டு, சிவபெருமானையே 'மழுவாள் நெடி யோன்! என்று பாடுகின்ருர் எனலாம்.

நச்சினர்க்கினியர் சிவன் எனக் கூருமற்போனலும் "மழு வாகிய வாளையுடைய பெரியோனை ஏனையோரின் முதல்வனகக் கொண்டு மாயோன், முருகன் முதலாய தெய்வங்கட்கு, விலக்கு தற்கு அரிய முறைமையினை உடைய, உயர்ந்த பலிகளைக் கொடுத்தற்கு அந்தியிற்கொண்ட விழவிலே தூரியம் கறங்க" என்றே பொருள் கூறுகிருர். மாயோன் முதல்யோரினும் வேருன ஒருவரையே மழுவாள் நெடியோனகக் கொள்கிருர். எனவே சிவபெருமானையே கூறுகின்ருர் எனக் கொள்ளலாம். இந்தத் திருவிழாவினை விளக்கும் சில அடிகளுக்கு அவர் பொருள் எழுதும் போது, "நாயன்மார்கோவில்களில் சேவிக்கும் மகளிர்" என்றும், 'நாயன்மார் எழுந்தருளுங்கால் கொடி எடுத்தல் இயல்பு' என்றும் எழுதுகிருர். "நாயனர்", "நாயன்மார்" போன்ற சொற்கள் சிவன்கோவிலில் உள்ள மூர்த்திகளுக்குத்தான் வழங்குவது வழக்கம். இதனலும் நச்சினர்க்கினியர் சிவபெருமானையே குறிக்கின்ருர் என்பது தெளிவு.

எனவே சிவபெருமானுக்கு எடுத்த திருவிழாவின் தீர்த்த வாரியில் தத்தம் குழந்தையும் கணவனுமாகப் போகின்ற பெண்கள் பூவும் புகையும் கொண்டு எங்கே தொழச் செல்வார் கள்? சிவபெருமானுடைய கோயிலுக்குத்தானே அவர்கள் செல்லவேண்டும்? எனவே இங்கே கடவுட் பள்ளி என்பதற்குச் சிவபெருமான்கோவில் என்று பொருள் கொள்வதே பொருத்த மாகத் தோன்றுகிறது. அதற்கு அடுத்தாற்போல், அந்தணர் பள்ளியைக் கூறுகின்ருர் புலவர். பின்னர்த் தான் சமணர் இருப்பிடம் கூறப்பெறுகிறது. மதுரையிலுள்ள பல சிறந்த இடங்களையும் கூறிவருகின்றவர், அந்திவிழாவைக் கூற வரும் போது அந்த விழா நடக்கும் கோயிலைக் கூருது விட்டுவிடுவாரா என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே மதுரை யில் சொக்கனது கோயிலையே மாங்குடி மருதனர் பாடுகின்ருர் எனலாம்.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.
திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

( மலர் 23, இதழ் 12, பக்கம் 706 இன் தொடர்ச்சி )

மாணுக்கன் : இறைவன், ஞானசத்தி மாத்திரத்தால் நோக்கும் நிலையில் நாதமாயும், கிரியாசத்தி மாத்திரத்தால் கருதும் நிலையில் விந்துவாயும், இரு சத்திகளாலும் நோக்கியும் கருதியும் நிற்கும் நிலையில் சதாசிவனுயும், ஞானசத்தி குறையக் கிரியாசத்தி மிகுந்து, நோக்குதல் சிறிதாகக் கருதுதல் பெரிதாக நிற்கும் நிலையில் மகேசுரனுயும் நிற்பன் எனின், கிரியாசத்தி குறைய, ஞானசத்தி மிகுந்து நிற்கும்நிலை இல்லையோ ?

ஆசிரியர் : உண்டு; அங்ஙனம் நிற்கும் நிலையில் இறைவன், 'வித்தியேசுரன்' எனப்படுவன். அந்நிலையும் உருவத் திருமேனியேயாம்.

மாணுக்கன் : இறைவன் மகேசுரனுய் இருந்தே உயிர்கட்குப் போகம், யோகம், வினைநீக்கம் ஆகிய எல்லாவற்றையும் செய்வன் என்றமையின், அதன் பின்னரும், 'வித்தியேசுரன்' என நின்று செய்வது யாது ?

ஆசிரியர் : இறைவன் உயிர்கட்குப் போகம் முதலியவற்றைத் தானேயும் செய்வன்; பிறரைக்கொண்டும் செய்விப்பன்; அவற்றுள், தானே செய்யுங்கால் மகேசுரனுய் நின்று செய்வன்; பிறரைக்கொண்டு செய்விக்குங்கால், அவர்களை அவ்வாற்ருல், நோக்குதல் பெரிதாகக் கருதுதல் சிறிதாய் நிகழ 'வித்தியேசுரன்' என்னும் நிலையில் நின்று செய்விப்பன். அதனுல், அந்நிலை மேற்கூறியவாற்ருற் பொதுப்பட ஒன்ருயினும், சிறப்பினுற் பலவாய் நிற்கும். அவ்வந்நிலைகளிலெல்லாம், அவனது சத்தியும் பலநிலைகளில் பலபெயர் பெற்று நிற்பள்.

மாணுக்கன் : அந்நிலைகள்தாம் யாவையோ ?

ஆசிரியர்: அரசன் ஆணையைப்பெற்று ஆளுதற்செயல்களிற், சிலவற்றைச் செய்யும் அமைச்சர் முதலியோர்போல, இறைவன் ஆணையைப்பெற்று, உலகத்தைச் சில வகைகளில், தொழிற் படுத்தும் சிறந்த தலைவர் சிலர் உளர். அவர்கள், 'அனந்த தேவர், சிகண்டருத்திரர், மால், அயன்' என்போர். மற்றும் இந்திரன், வருணன், வாயு, அக்கினி, சூரியன், சந்திரன், நாள், கோள் முதலாக எண்ணற்ற சிறப்பில்லாத தலைவர்களும் உளர். அவரெல்லாம் பெற்றுள்ள வடிவும், பெயரும் அவரவர் தொழிலுக்கேற்ப அமைந்தனவாம். அவற்றை அவர், தம் தம் புண்ணிய விசேடத்தாற் பெற்றவர். அவர்களையெல் லாம் அவ்வவ்வாற்றல் இயக்குதற்கு அமைந்த நிலையே, 'வித்தியேசுர நிலை' என்பது. எனவே, இந்நிலையில், நோக்கப் படுவாரது நிலைபற்றி இறைவனும் பல்வேறு நிலையினனாய், அவ் வப்பெயரைப் பெற்று நிற்பன் என்பது விளங்கும். இறைவன் போகியாய் நில்லாதவழிப் போகமும், யோகியாய் நில்லாதவழி யோகமும் உயிர்கட்கு அமையாதவாறுபோல, இறைவன் அனந்தகர் முதலிய நிலையினனாய் நில்லாதவழி, அவ்வந்நிலை யினருக்கு அவை அமையாவாம். ஆதலின், அவர்பொருட்டு இறைவன் அப் பல்வேறு நிலையினனாய் நிற்பன் என்க.

'அனந்தர், உருத்திரர், மால், அயன்' என்னும் பெயர்கள் முழுமுதற் கடவுளாகிய இறைவனையும், அவ்வத் தொழில் மட்டில் முதல்வராய் நிற்கும் தலைவர்களையும் குறிப்பனவாய் வரும். இப்பெயர்களுக்குரிய இறைவனது நிலைகள், 'சம்பு பட்சம்' என்றும், இப்பெயர்களையுடைய தலைவர்களது நிலைகள், 'அணுபட்சம்' என்றும் சொல்லப்படும். சம்பு-சிவன்; இறைவன். அணு-உயிர்கள். பட்சம்-பகுதி.

மாணுக்கன் : 'உருத்திரன், மால், அயன்' முதலிய பெயர் கள் வருமிடத்து, 'இவை சம்பு பட்சமாகிய சிவபிரானது நிலை யைக் குறிக்கின்றன; இவை அணுபட்சமாகிய பிறதேவர்கள் நிலையைக் குறிக்கின்றன' என்று அறிதல் எவ்வாறு ?

ஆசிரியர் : முன்னும் பின்னும் வருகின்ற சொற்குறிப்புக் களால் அவை உணர்ந்து கொள்ளப்படும். அஃதாவது, சிவ பிரானுயினும், ஏனைய தேவர்களாயினும் அவரவருக்குரிய சிறப் பியல்புகள் உள்ளன. அச் சிறப்பியல்புகளை முதன்மையாகவும்,

ஏனையவைகளைப் பொதுவாகவும் கூறும் முறையால், அவ்வேறு பாடு விளங்குவதாகும். உதாரணமாக ஒன்றிரண்டைக்கூறலாம். திருத்தாண்டகம் ஒன்றில், "நாரணன்காண் நான்முகன் காண்" (திருமுறை 6. 8-3 என்பன முதலாக அருளிச்செய்யு மிடத்து, "புரிசடைமேற் புனல்ஏற்ற புனிதன் ருன்காண்" என அருளினமையின், அச்சிறப்பியல்புபற்றி, முன்னர்வந்த, 'நாரணன், நான்முகன்' என்பன, சம்பு பட்சத்தைக் குறிக் கின்றன என்பது அறியப்படும்.

"ஆதிஅயனுய்ப் படைப்பான் அரியாகிக் காப்பான்
அரனுய் அழிப்பவனும் தானே"
(ஞானஉலா-5)

என வருவது,

"திருமாலும் நான்முகனும் தேர்ந்துணரா தன்றங்
கருமா லுறஅழலாய் நின்ற — பெருமான்" (ஷை-1)

என்பதை முன்னர்க்கொண்டு நிற்றலின். அவ்வாறே, 'அயன், அரி, அரன்' என்ற அவை, சம்பு பட்சத்தைக் குறிக்கின்றன என்பது விளங்கும். இன்னும்,

"சுருதிவா னவனும் திருநெடு மாலாம்
சுந்தர விசும்பில்இந் திரனும்
பருதிவா னவனும் படர்சடை முக்கட்
பகவனும் அகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனும் எயில்கள்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே"
(திருவிசைப்பா-13-5)

என்றாற்போல வருவன பலவற்றுள்ளும், 'அயன், மால், இந்திரன்' முதலிய பெயர்கள் சம்பு பட்சத்தையே குறிக்கின் றன என்பது தெற்றென விளங்கி நிற்குமாறு அறியலாகும். மேற்காட்டிய திருவிசைப்பாவில், 'கருதுவார் கருதும் உருவ மாம்' என்றதனுல், 'யாவராயினும் யாதானும் ஒராற்ருல், யாதானும் ஒரு தெய்வ வடிவத்தை நினைந்து வழிபடினும், அத்தெய்வ வடிவமாயும் சிவபிரான் நிற்பன், என்பது உணர்த் தப்பட்டமை நன்குணரத்தக்கது. ஞான உலாவிலும்,

" எவ்வுருவில் யாரொருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான் " (7)

என்று அருளப்பட்டது.

" ஆருருவ உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும் "
(திருமுறை 6-18-11)

என்று அப்பரும் அருளிச்செய்தார். இவையெல்லாம், எண்ணற்ற தேவர்களது நிலைகளும் சம்பு பட்சத்திலும் உள்ளன என்பதையே விளக்கிநிற்கும். இவ்வாறன்றி,

" நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடிநா ராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணல்எண்ணில் இந்திரர்
ஈறி லாதவன் ஈசனொருவனே " (திருமுறை 5-100-3)

" வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய "
(திருவா. திருவம். 4.)

என்றாற்போல அவ்வத்தேவரையே குறித்து வருவனவெல்லாம், அணுபட்சத்தையே குறிப்பனவாதல் தெளிவு. இங்ஙனம் அவ்வவ்விடத்தும் சம்பு பட்ச, அணு பட்சங்கள் நன்குணர நிற்குமாகலின், அவ்விரு திறத்தையும் ஒன்றாகவே நினைந்து, பசுக்கட்கும், பசுபதிக்கும் வேறுபாடு காணாது தடுமாற்றம் உறுதல் வேண்டாவாம்.

மாணாக்கன் : சிவபிரானையன்றிப் பிற கடவுளரை வழிபடுவோரும், அடிகள் கூறுதல்போலவே தம் தம் கடவுளை, ஏனைய பல கடவுளராயும் நிற்பர் என்று கூறுகின்றனரன்றோ? அவர்த கூற்று எத்தன்மையது ?

ஆசிரியர் : எல்லாக் கடவுளரும் சிவபிரானுக்குக் கீழ் உள்ளவரேயாகலின், 'எல்லாத் தேவருமாய் நிற்பான்' என்பது, சிவபெருமானுக்கே உண்மையில் பொருந்துவதாகும்.

ஏனையோரை அவர்தம் கீழுள்ள தேவர்களாய் நிற்பர் எனின், அது முகமனுரையாய் ஒருவாற்றாற் பொருந்துமல்லது, அவர்க்கு மேல் உள்ள, தேவர்களாய் நிற்பர் எனக் கூறுவாராயின், அஃது, அவர்தம் எல்லையில் பற்றுக் காரணமாகக் கூறும் முறையில் கூற்றேயாம்.

மாணுக்கன் : தேவர்களது நிலைகளில், 'மேல் இது ; கீழ் இது' என்று அறிதல் எவ்வாறு ?

ஆசிரியர் : அது தத்துவங்களை உணரும் முறையினுல் விளங்கும்; ஆதலின் அதனை, தத்துவங்கள் பற்றிக் கூறுமிடத்துக் கூறலாம்.

மாணுக்கன் : அஃது அவ்வாருயின் ஆகுக; சிவபிரானே முழுமுதற்கடவுளாய் நின்று, ஏனைய பல கடவுளராயும் நிற்பன் எனக் கூருது, மாயோன் முதலியவருள் ஒருவரை அவ்வாறு கூறினுல் வரும் குற்றம் யாது ?

ஆசிரியர் : அதற்கு விடை முன்னரே விரிவாகக் கூறப் பட்டது; அஃதாவது, 'பிறப்பு இறப்பு முதலிய உயிர்க்குணங் களுள் ஒன்றும் இல்லாதவனும், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் முதலிய எட்டாய கடவுட் குணங்களை முற்ற உடைய வனும் சிவபெருமானே' என்பது எல்லா நூல்கட்கும் ஒப்ப முடிந்த உண்மையாகலின், அன்ன நூற் பிரமாணத்தாலும், 'அழித்தற்கடவுளே முதற்கடவுளாதல் சாலும்' என முதற்கண் பலவாற்றானும் ஆராய்ந்துகண்ட அனுமானப் பிரமாணத் தாலும், சிவபிரானை ஒழித்து, ஏனையோரை முதற்கடவுளர் என்று கொண்டு, 'அவரே ஏனைய கடவுளர் பலராயும் நிற்பர்' எனக் கூறுதல், முரணிக் கூறுதலாய் முடியுமல்லது, உண்மை கூறுதலாகாது.

மாணுக்கன் : இவ்வையம் முற்ற நீங்குமாறு நன்கு அருளிச் செய்தீர்கள். இங்ஙனம் உணர்த்தியவற்ருல், உலகத்தைத் தொழிற்படுத்துமிடத்து, இறைவன், 'சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மகேசுரன், வித்தியேசுரன்' என ஏழு நிலைகளை உடையவனுய் நிற்பன் என்பது முடிபாகின்றது போலும் !

ஆசிரியர் : அவ்வாறில்லை; வித்தியேசுரனாய் நிற்கும் அவ்வொருநிலையிலே, இறைவன் ஒருவனாய் நில்லாது, 'உருத்திரன், மால், அயன்' முதலிய பலப்பல நிலைகளை அடைவன்; எனினும், இம்மூன்று நிலைகளே சிறந்தெடுத்துச்சொல்லப்படும். அதனால், 'வித்தியேசுரன்' எனத் தனியே கூறாது, 'உருத்திரன், மால், அயன்' என மூன்றாக வைத்து, 'மகேசுரன்' என்பவற்றின் பின்னர்க் கூட்ட, ஒன்பது நிலைகள் உளவாகும். அவை, 'நவந்தருபேதம்' எனப்படும். ஆதலின், ஒருவனாகிய இறைவனே, உலகத்தைத் தொழிற்படுத்த வேண்டி, நவந்தரு பேதங்களை உடையவனாய் நிற்பன் என்று அறிக.

இந் நவந்தரு பேதங்களும் சிவம் முதலாக அயன் ஈறாக ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றுவனவாம். இவற்றை, 'ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றும்' என்றல், 'வித்திலிருந்து முளைதோன்றும்' என்றல்போல்வது அன்று; 'இறைவன் ஒரு நிலையில் நின்று, அதன்பின் மற்றொரு நிலையில் நிற்பன்' என்பதே கருத்தாம். இந் நவந்தரு பேதங்களுள், 'சத்தி, விந்து' என்னும் இரண்டும் சத்தி பேதங்களே; எனினும், அவை இரண்டும் ஏனைய சத்திகள்போல உடன் நில்லாது, முறையே சிவத்திற்கும் பின்பும், நாதத்திற்குப் பின்புமாய் சிவ பேதங்களின் இடைவந்து நிற்கும். அதனால் சிவபேதங்களோடு ஒருங்குவைத்து எண்ணப்பட்டன. ஆகவே, 'சிவன், நாதன், சதாசிவன், மகேசுரன், உருத்திரன், மால், அயன், என்னும் சிவபேதம் ஏழிற்கும் முறையே, 'சத்தி, விந்து, மனோன்மனி, மகேசுவரி, உமை, திருமகள், கலைமகள்' எனச் சத்தி பேதமும் ஏழாய் நிற்க, அவற்றோடு நின்று இறைவன், உலகைப் பல வாற்றானும் தொழிற்படுத்துவன். நவந்தரு பேதங்களுள், 'சிவம், சத்தி, நாதம், விந்து' என்னும் ஏழும் அருவத் திருமேனி எனவும், 'சதாசிவம்' என்னும் ஒன்றும் அருவுருவத் திருமேனி எனவும், 'மகேசுரன், உருத்திரன், மால், அயன்' என்னும் நான்கும் உருவத்திருமேனி எனவும் நன்குணர்ந்து கொள்க. இனி, உருவத்திருமேனி நான்கும், 'அதிகாரம்' எனவும், அருவுருவத்திருமேனி ஒன்றும், 'போகம்' எனவும், அருவத்திருமேனி நான்கும், 'இலயம்' என்றும் கூறப்படும் என்பதும் உணர்ந்துகொள்க.

( தொடரும் )

# மலரும் மணமும்

"திருக்குறள் வேள்"

## திரு. ஜி. வரதராஜப் பிள்ளை பி. ஏ.,

இயற்கைக் காட்சியில் மலரைப் போன்று மகிழ்ச்சியைத் தருவது வேறு என்ன பொருள் உள்ளது! எத்துணை அழகு; எத்துணை மென்மை; எத்துணை ஒற்றுமை! கவிஞர்களின் உள்ளங்களுக்கு உணர்ச்சியை யூட்டி இன்பத்தை நல்குவது; ஞானியர்களுக்கு எண்ணங்களைத் தூண்டி அமைதியைத் தருவது; ஆதலின், மக்கள் வாழ்விலே மலர் சிறப்பிடம் பெற்றது. இறைவனை வணங்குவதற்கும் மலரையே பயன் படுத்தினர் நல்லோர். மலர் தூவி இறைவனை வழிபட்டால், பெறுதற்கரிய பேருகிய முத்தியையடையலாம் என்கிருர் திருஞானசம்பந்தர்.

" சித்தந் தெளிவீர்காள்
அத்தன் ஆரூரைப்
பத்தி மலர் தூவ
முத்தி யாகுமே "

என்பது அவரது அருள்வாககு.

இனி, சிறந்த உண்மைகளை விளக்குவதற்கும் மலரையே உவமையாகக் கொண்டனர் நம் சமயச் சான்ருேர். மலரும், அதன் வண்ணமும், அதன் மணமும், சத்து, சித்து, ஆனந்த மாகிய இறைவனது இயல்பை நினைவூட்டுவதாகக் கூறுவார் பரஞ்சோதியார்.

" பூவண்ணம் பூவின் மணம்போல மெய்ப்போத இன்ப
மாவண்ண மெய் கொண்டவன் "

—திருவிளையாடற்புராணம்.

மணம், நிறம், பூ என்ற மூன்றும் சேர்ந்து பூ என்பது போல. இன்பம், அறிவு, உண்மை என்ற மூன்றும் இறைவன் சொரூபமாம்.

மாணிக்கவாசக அடிகளுக்கு மலரும் மணமும் வேறோர் உண்மையைப் புலப்படுத்தின. பூவில் மணம் எங்கும் நிறைந்துள்ளதுபோல, இறைவன் எல்லாப் பொருளிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்பது அவரது திருவுள்ளம்.

" பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை "

—திருவாசகம்.

மற்றோர் இடத்தில் மாணிக்கவாசக அடிகள் இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பினைக்கூற வந்தபோது, இவ்வுவமையினை எடுத்து இறைவனுடைய கலப்புக்கு உயர்வு கூறினார்.

" உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம்போல்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்த னாண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே "

—திருவாசகம்.

'ஜீவன் உடலில் இருப்பது போலவும், மணம் மலரில் இருப்பது போலவும், இறைவன் எல்லாப்பொருளிலும் நிறைந்தும், மேலாயும் விளங்குகிறான். ஆனால் அறிவிலிகள் இவ்வுண்மையினை உணராது, உடலோடுகூடி அனுபவிக்கும் இன்பத்தினையே பெரிதாக எண்ணி மகிழ்கிறார்கள். இவர்களது கூற்றைக் கேளாது என் தந்தை என்னை அடிமைப்படுத்தித் தன் அடியார்

கூட்டத்தில் சேர்த்துக்கொண்டு, இவ்வதிசயத்தைக் காட்டினுன்" என்பது இதன் பொருள். ஜீவனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு, உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போன்றது என்ருலும், ஜீவனுக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு மிக உயர்ந்தது. உடலோடு கூடி அனுபவிக்கும் இன்பம் மிகவும் அற்பமானது; நிலேயற்றது. ஆனுல் இறைவ னேடு கூடி அனுபவிக்கும் இன்பம் மிகவும் உயர்ந்தது; நிலேயானது. ஏன்? இறைவன் துன்பம் இல்லாதவன்; இன்ப வடிவினன். ஆதலால் தன்னேயடைந்தார்க்குத் துன்பத்தைப் போக்கி இன்பத்தை அளிக்கக் காத்துக்கொண்டிருக்கிருன். இவ்வுண்மையினே உணர்ந்து அவனே நாடுவோமாயின், ஜீவனில் சிவமணம் கமழும். அனுபவத்திலே தலே சிறந்த யோகியான திருமூலர், 'சீவனுக்குள்ளே சிவமணம் பூத்தது' என்று இக் கருத்தினேத் தெளிவாகக் கூறியுள்ளார்.

பல இடங்களில் திருமூலர் மலர் உவமையைக் கூறியுள்ளார். இறைவன் உயிர்களில் காற்றில் அசைவும், கரும்பில் சர்க்கரை யும், பாலில் நெய்யும், பழத்தில் ரசமும், பூவில் நாற்றமும் போலக் கலந்திருக்கிருன் என்பது இறைவனது கலப்புக்கு அவர் கூறும் உவமைகள்.

" காலி னூறும் கரும்பினிற் கட்டியும்
பாலினுள்நெய்யும் பழத்து ளிரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவல னெங்கும் கலந்து நின்ருனே "

—திருமந்திரம்.

மலருந் தறுவாயிலுள்ளபோதுகளில் கலந்திருக்கும் மணம்போல, இறைவன் உலகு, உடல், உயிராகியவற்றில் கலந்திருக்கிருன் என்கிருர் தாயுமானவர். போது மலரும்போது உண்டாகும் மணம் மிக இனிமையுடையதாக இருக்குமாதலின், போதில் மணத்தை உவமை கூறினுர். கைலாயத்தில் வீற்றிருக்கும் பெருமான், சொல்லும் பொருளுமாய், உடலும் உயிருமாய், மலரும் மணமுமாய் இருக்கிருன் என்று நக்கீர தேவர் கூறுகிருர்.

இறுதியாக, இன்னொரு பெரியவர் மலர் உவமையை அழகாக எடுத்துக் கூறுகிறார். அவர்தாம் நம் தருமையாதீனக் குருமுதல்வராம் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர். இறைவனும், முத்திபெற்ற ஜீவனும் விறகும் தீயும், வெந்நீரும் சூடும், தேனுந் தித்திப்பும், மலரும் மணமும், ஆகாயமுங் காற்றும், கண்ணுங் கதிரொளியும் என்ஞான்றும் வேறற நிற்றல் போல இருக்கும் என்றார்.

" இந்தனத்தி னங்கி எரியுறுநீர் தேனிரதங்
கந்தமலர்ப் போதுவான் காலொளிகண் – சந்ததமும்
அத்துவித மாவதுபோல் ஆன்மாவும் ஈசனுமாய்
முத்தியிலே நிற்கும் முறை "

—சிவபோகசாரம்.

'விறகிற்றீ, முன்னர் விளங்காது நின்ற சிவம்தானே பின்னர், ஆன்மாவின் மாட்டு விளங்கித் தோன்றுமாற்றிற்கும், வெந்நீரின்கட் சூடு ஆன்மாவின் அறிவிச்சை செயல்களைச் சிவன் தனது அறிவிச்சை செயல்களின் தன்மைய ஆக்குமாற்றிற்கும், தேனில் தித்திப்பு அவ்வழிச் சிவன் இத்தன்மைத்தென்றுரைக்க வாராத இன்ப போகமாய் விளையுமாற்றிற்கும், மலரின் மணம் அப்போகம் மேன்மேலும் புதிது புதிதாய் விளையுமாற்றிற்கும், காற்றிற்கு வான் ஆன்மாவைச் சிவன் தனது திருவடி வியாபகத்துள் அடக்கிக் கொள்ளுமாற்றிற்கும், கண்ணிற் கதிரொளி அம்முத்திக்காலத்தும் ஆன்மாவிற்குச் சிவத்தினது உபகாரம் இன்றியமையாதவாற்றிற்கும் உவமையாம்' என்று கூறிய தருமையாதீன உரைக்குறிப்பை எண்ணிப் போற்றுக.

இறைவனே அருளினாலன்றி அவன் அருளை நாம் பெற முடியாது. ஆனால் அருள்பெற்ற அடியார்கள் தம் திருவாயினின்றும் மலர்ந்த சொற்களாகிய மலர்களைக் கொண்டு தொடுத்த பாக்களாகிய மாலையை நாமும் இறைவன் திருவடிகளில் சாத்தி வழிபட்டு அதனைப்பெறுவோமாக.

# நாநல மென்னும் நலம்

வித்துவான். திருமதி. ப. நீலா

ஆவூரின் அழகுமிக்க கோட்டையினுள் அரியணையில் அமர்ந்திருக்கிருன், சோழர் குலத்தோன்றலாகிய நெடுங்கிள்ளி. இவனது தாயத்தினனுகிய நலங்கிள்ளிக்குரியது இந்த ஆவூர்க் கோட்டை. ஆகவே அவன் படையுடன் கோட்டை மதிலை முற்றுகை இட்டுப் போர் முரசையும் முழக்குகிருன். நெடுங்கிள்ளியோ கோட்டையின் திண்நிலைக்கதவுகளை இறுகச்சார்த்தி, போருக்கு ஆயத்தமாகாமல் இன்பமாய்ப் பொழுதுபோக்கிக் கொண்டிருக்கிருன். அரசனைக் கண்டு அமைச்சர் முதலியோர் சொல்வதும், செய்வதுமறியாமல் திகைத்து நிற்கின்றனர். நெருங்கிச் சொல்லும் தகுதிபடைத்த அமைச்சர்களின் அறிவுரைகளை ஏற்கும் நிலையில் அரசனும் இல்லை.

இந்நிலையில் நாநலம் படைத்த புலவர் பெருந்தகை கோவூர் கிழார் வருகைதந்தார். உற்றுழி உதவுவதல்லவா ஆன்ருேர் கடன். கற்றறிந்த புலவருக்கு அரசன் இருக்கின்ற நிலை அகங்கை நெல்லியென விளங்கிற்று. உடன் தாம் செய்ய வேண்டிய செயலும் நினைவிற்குவர, புலவர் புரவலனை நோக்கிப் பேசத்தொடங்கினுர். அரசனைக் காண்பதற்காகத் தாம் வந்த வழியில் கண்ட காட்சிகளின் தன்மையைப் புலமை நலத்தோடு பொருந்தச் சொன்னுர்.

அரசே! உனது தாயத்தானுகிய நலங்கிள்ளிக்குப் பயந்து நீ இப்படிக் கோட்டையினுள்ளே அடைந்து கிடப்பது எற்றுக்கோ! படைபலம் இல்லாதவனல்லவோ மாற்ருனுக்கு மண்டியிட்டும், மாலையிட்டும் அடிபணிவான். நான் வரும்வழியில் நிலமிசைப் புரளும் நீண்ட கையை உடைய உயர்ந்த இலக்கணமுடைய யானைகளைக் கண்டேன். பகைப் புலத்திலே ஒன்னுர் முடியிடற வேண்டியவைகள் பரிதாபத்திற்குரிய நிலையில் கயத்தில் படியாமலும், நெய்யுடை நெய்ம்மிதி கவளம் பெருமலும் நோன்வெளில் பாழாக மருங்கு முறித்து, இடியென உருமிக் கொண்டு நிற்கின்றன. நீயோ துன்னரும் துப்புடன் வலிமை

பொருந்திய விரைந்த செலவைக் கொண்ட குதிரைகளையும் கொண்டுள்ளாய். கடுஞ்சினத்த கொல்களிறும் கதழ்பரிய கலிமாவும் கொண்ட நீ கோட்டையினுள் அடைபட்டிருத்தல் அவமானமல்லவா ! உன்னுடைய காதில் மக்களின் அவலக் குரல் எட்டவில்லையா ! பாலில்லாத குழவி தாய்முகம் நோக்கி அழவும், மகளிர் மங்கலத்திற்கும் இன்பத்திற்கும் இருப்பிடமான பூ இன்றி வறிய கூந்தலை முடிக்கவும், நல்ல வீடுகளில் உள்ளார் வருந்திக் கூப்பிடவும் நீ இன்பமாக இனிதிருக்கும் செயல் நாணம் தருவதாக அல்லவோ உள்ளது ! அறந்துஞ்சும் நெஞ்சுடையனுயின் இதுவும் உனதன்றோ என்று கோட்டைக் கதவை மலர்த்திவை ! மாற்றானைப் போர்முனையில் காண்பதாக இருப்பின் மறத்துடன் கதவைத் திறந்திடு ! அறமும் மறமும் இல்லையாக வாளாவிருத்தல் என்ன பயனைத் தரும் ? பாயும் குதிரைகளும், பகட்டெழில் யானைகளும் பாதுகாப்பிற்குத் தயாராக இருக்க, திண்நிலைக் கதவைப் பாதுகாப்பாகக்கொண்டு அவற்றின் பின்பு இருத்தலா மானமுடைய மன்னனுக்கு அழகு ! என்று செந்தமிழ்ப் புலவர் அரசன் செவிபொறுக்கும்வண்ணம் அறிவுறுத்தினர்.

புலவரின் பண்புடைய உள்ளத்தினின்றும் எழுந்த இன் சொற்கள் நாநலத்துடன் இயைந்து, செவி கைப்பச் சொற் பொறுக்கும் பண்புடை வேந்தனாகிய அவ்வரசனின் செவி வாயாக நெஞ்சுகளனாக இடம் கொண்ட பின் அவர் எதிர்பார்த்த பலனே விளைந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ !

" நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ள தூஉ மன்று"

என்பதல்லவா தமிழ் வேதவாக்கு!

புறநானூற்றின்கண் அமைந்தொளிரும் அவ்வருந்தமிழ்ப் பாடல் இதோ,

" இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளும் கைய வெய்துயிர்த்
தலமரல் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும் நீரில்
வினைபுனை நல்லி லினைகூஉக் கேட்பவும்

இன்னு தம்ம வீங்கினி திருத்தல்
துன்னரும் துப்பின் வயமான் தோன்றல்
அறவை யாயின் நினதெனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல்
அறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொருசிறை யொடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே.

(புறம் - 44.)

பிறிதொருசமயம் நெடுங்கிள்ளி தனக்குரிய உறையூர்க் கோட்டை யிலே இருந்தான். அங்கும் வந்து முற்றுகையிட்டான், சோழன் நலங்கிள்ளி.

சோழர் குடியிலே தோன்றிய இருவரும் இப்படித் தமக்குள் அடிக்கடி மாறுபாடு கொள்வது மற்றைய இருவேந்தர்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்துவந்தது. இவர்களுடைய பகைமை உணர்வைக் களைவதுதான் எப்படி என்று கலங்கிய நேரத்தில் செந்நாப்புலவர் கோவூர் கிழார் வந்து சேர்ந்தார். இருபெரு வேந்தரையும் சந்து செய்வித்தல் வேண்டும் என்று எண்ணியதுடன் யார் மனமும் நோகாமல் அப்பணி நிறைவுற வேண்டுமே என்றும் சிந்திக்கலானார்.

முற்றுகையிட்டிருந்த நலங்கிள்ளியைக் கண்டார். கோட்டை யினுள்ளிருக்கும் நெடுங்கிள்ளியையும் பார்த்தார். இருவர் கழுத்திலும் ஒரே மாலை. இருவர் கொடியிலும் ஒரே சின்னம். உடனே அறிவொளி வீசியது. அருந்தமிழ்ப் பாடல் பிறந்தது. "உன்னுடன் போர் செய்பவன் பனையின் வெண்தோடு அணிந் தவனோ, வலிய வேம்பின் தெரியல் அணிந்தவனோ அல்லன் உனது மார்பிலும், அவனுடைய மார்பிலும் விளங்குவது ஆத்தி மாலையே ! இருவரில் யார் தோற்றாலும் தோற்றவர் இன்னார் என்று கூறாமல் தோற்றது சோழர் குடி என்றுதானே உலகம் பேசும்! இருவீரும் வெல்லுதல் உலகியற்கையுமன்று. மாறாக உங்கள் மனப்பூசல் மாற்றாருக்கு மெய்மலி மகிழ்வையன்றோ தருகின்றது என்று கூறிய செம்மொழி வேந்தர்களின் மனக் கோட்டம் தீர்க்கும் மருந்தாக அமைந்தது. மதிநுட்பம் நூலோடு உடைய புலவர் பெருந்தகையாரின் நாநலமல்லவோ இத்துணைக் கும் காரணம்.

" இரும்பனை வெண்தோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோ னல்லன்

நின்ன கண்ணறியு மார்மிடை ந்தன்றே நின்னெடு
பொருவோன் கண்ணறியு மார்மிடை ந் தன்றே
ஒருவீர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
இருவீர் வேற லியற்கையு மன்றே; அதனால்,
குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே."

புறம் - 45.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.


One should deem it his good fortune in One's life to visit this great Temple and offer worship and the Divinity, that pervades this holy atmosphere is indiscribable. The cleanliness, courtesy and the facilities made available by the Temple authorities for worshipping in this great shrine is beyond description. I congradulate and admire the spirit of service prevalent amongst all the persons connected with this shrine, in offering what pilgrims require and this goes to show the great qualities of His Holiness the Dharmapuram Adhinam under whose spiritual and inspiring guidance this great shrine is administered. I wish all the temples in this great Land of Ours immitate this illustrious example of this place.

It is a wonder how Our ancestors built such a beautiful shrine and more so how it is so well maintained under present day conditions. Let this good and excellent work may continue under His Divine Will and be a beconlight for others to follow.

An earnest and admiring devotee of Sri Vaidyanathaswamy.


(Sd.) K. Subramaniam,
State Bank of India, Madras.

24—11—64.



ஸ்ரீ சட்டைநாதர்

திருக்கடவூர்



ஸ்ரீ அபிராமி அம்பாள்

# மெய்கண்டார் காலம்

"சைவ இலக்கியப் பேரறிஞர்"

டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனுர் M. A., Ph. d.,

வரலாறு :

தென்னார்க்காடு மாவட்டத்துப் பெண்ணகடம் என்னும் ஊரில் அச்சுதக் களப்பாளர் என்ற வேளாளப் பெருமகனர் ஒருவர் வாழ்ந்தார். அவர் மகப்பேறு இன்றி வருந்தினர். அவருடைய ஞான ஆசிரியராகிய சகலாகம பண்டிதர் என்ற அருணந்திசிவம் தேவாரத்தில் கயிறு சார்த்திப் பார்த்தார்; திருவெண்காடு என்னும் திருப்பதியில் உள்ள முக்குளங்களில் நீராடின் மகப்பேறு கிடைக்கும் என்று கூறினர். களப்பாளர் தம் மனைவியாருடன் திருவெண்காடு சென்று முக்குளங்களில் நீராடி மகப்பேறு பெற்றனர்; அப்பிள்ளைக்குத் திருவெண் காட்டுச்சிவபிரான் பெயரான சுவேதவனப் பெருமாள் என்ற பெயரை இட்டனர்.

சுவேதவனப் பெருமாள் திருவெண்ணெய்நல்லூரில் இருந்த தம் தாய்மாமனுடன் வளர்ந்துவந்தார். அவர் பிள்ளைகளுடன் தெருவில் ஒருநாள் விளையாடிக்கொண்டிருந்தார். அப்போது பரஞ்சோதி முனிவர் என்ற சைவப் பெரியார் அவரைக் கண் டார்; அப்பிள்ளை சிறந்த சமய அறிஞராய் விளங்குவார் என் பதைத் தம் நுண்ணுணர்வால் அறிந்து. அவருக்குச் சைவ சித்தாந்த சாத்திர அறிவை ஊட்டி அகன்றார்; அவருக்கு மெய் கண்டார் என்னும் பெயரையும் வழங்கினர்.

மெய்கண்டார் தம்மை அடைந்தவர்க்குச் சைவசித்தாந்த கருத்துக்களை வழங்கிவந்தார். அச்சிறுவர் தம்மிடம் படிக்க வரவில்லையே என்று சகலாகம பண்டிதர் எண்ணினர். அச் சிறுவர், பலருக்கும் சைவ சித்தாந்த அறிவை ஊட்டிவந்தார் என்பதைக் கேட்டு வியப்புற்று அவரைச் சென்று கண்டார்; அப்பண்டிதர் சமயநூல் அறிவில் பேரறிஞர்; அதனல் செருக்குக் கொண்டவர். அவர் ஆணவத்துக்கு எடுத்துக்காட்டுக் கூற

முடியுமா என்று கேட்டார். பண்டிதர் இக்கேள்வியை மிக்க ஆணவத்துடன் கேட்டார். சிறுவராகிய மெய்கண்டார் புன் முறுவலோடு பண்டிதரைத் தலைமுதல் கால்வரையில் பார்த்தார். 'ஆணவத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு நீர்தாம்' என்பதுவே அப்பார்வையின் கருத்து. பண்டிதர் இதனை உணர்ந்தார். அவர் அப்பொழுதுதான் மெய்கண்டார் 'சிறிய பெருந்தகை யார்' என்னும் உண்மையை உணர்ந்தார். உடனே முதிய வராகிய அப்பண்டிதர், சிறுவராகிய மெய்கண்டாரைப் பணிந்து அவருக்கு மாணவரானார்; சைவசித்தாந்த நுட்பங்களைக் கேட்டு மகிழ்ந்தார். அவர் மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம் என்னும் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்ட சிறிய நூலுக்குப் பெரிய விளக்கவுரை எழுதினார். சிவஞான சித்தியார் என்பது அவ்விளக்கவுரையின் பெயராகும். இம்மெய்கண்டார் காலம் யாது?

கல்வெட்டு :

சுவஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ இராஜராஜ தேவர்க்கு யாண்டு பதினாறுவது இஷப ஞாயிற்று இருபத் தெட்டாம் தியதியும் சனிக்கிழமையும் பெற்ற மிருகசீரிஷத்து நாள்-உடையார் திருவண்ணுமலையுடைய நாயனார் கோயில் சீமாகேசுவரக் கண்காணி செய்வார்களும் தேவர்கன்மி கோயிற் கணக்கனும் திருவெண்ணெய் நல்லூருடையான் மெய்கண்ட தேவன் ஊருடைப் பெருமாளான எடுத்தது வலியவேளார்க்குக் கல்வெட்டிக் கொடுத்த பரிசாவது.

இந்நாயனார் தேவர்தானம் செங்குன்ற நாட்டு மாத்தூரான ராஜராஜநல்லூரில் இவர் வெட்டுவித்த மெய்கண்ட தேவப் புத்தேரிக்குக் கடமை இறுக்கும் இடத்துத்திருத்தின ஆண்டு குழி நாழியும் பாடி காவலும் கொள்ளக்கடவதாகவும்; இதன் எதிராம் ஆண்டு கால்வரிசையும் பாடிக்காவலும் இறுக்கக் கடவதாகவும்; இதன் எதிராம் ஆண்டு முதல் காலே அரைக் கால் வரிசையும் பாடிகாவலும் உட்பட வேலி எண்பதின்கலம் இறுக்கக்கடவதாகவும்; இவ்வேந்தலுக்கு எல்லை அரசுக்குக் கிழக்கு நீரேறின நிலம் திருத்திப் பயிர் செய்யக்கடவதாகவும்; இவ்வேந்தலுக்குப் புஞ்சை நிலம் அரைசுக்குக் கிழக்கு, திருக் கோவலூர்ப் பெருவழிக்கு வடக்கு, இவ்வேந்தலைச் சூழ்ந்த நிலத்திலே அஞ்சு வேலி தறை எல்லையாய்ப் பண்டாரத்துக்குக் கடமை இருக்கக்கடவதாகவும்; இவ்வேந்தலின் திருத்தப்பட்ட

நிலத்திலே இவ்விராசராசநல்லூரில் எழுந்தருளிவிக்கிற உடையார் மெய்கண்டீசுவரமுடைய நாயனார்க்குப் பூசைக்கும் அமுது அளிக்கவும் மூன்றில் ஒன்றைத் தேவதானமாவதாகவும்; இவ் வேரிக்கு ஏரிப்பட்டி மன்றுட்டுப் பட்டியுமாக ஐஞ்ஞூறு குழி விடக்கடவதாகவும்; இவ்வேந்தல் தம் பொருளிட்டு வெட்டுகிற நிலம் இவ்வேரியும் நிலமும் குடிநீங்காத் தேவதானமாய் இவர்க்குச்சந்திராதித்த வரையும் காணியாய் விற்றெற்றிப் பரிக்கிரகம் செல்லக்கடவதாகவும்; இப்படி சம்மதித்துக் கல்வெட்டிக் கொடுத்தோம் இவ்வனைவோம். இது பன்மாகேசுவர ரக்ஷை.[1]

காலம் :

இக்கல்வெட்டுத் திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோவில் முதல் திருச்சுற்றின் வடபுறச்சுவரில் பொறிக்கப் பட்டுள்ளது. தொண்டைநாட்டு இருபத்துநான்கு கோட்டங் களுள் செங்குன்றக் கோட்டம் என்பது ஒன்றாகும். 'செங் குன்றம்' என்பதன் வடமொழிப் பெயரே 'அருணாசலம்' என்பது. செங்குன்றம் இருந்தநாடு செங்குன்றநாடு எனப் பட்டது. செங்குன்றைத்தையுடைய கோட்டம் செங்குன்றக் கோட்டம் எனப்பட்டது. திருவண்ணாமலையைத் தன்னிடத்தே பெற்றுள்ள நிலப்பரப்பு அக்காலத்தில் செங்குன்றக்கோட்டம் எனப்பட்டது.

செங்குன்றநாட்டு ஊர்களுள் மாத்தூர் ஒன்று. அஃது இராசராசநல்லூர் எனவும் பெயர்பெற்றது. அவ்வூரில் திரு வெண்ணெய்நல்லூர் உடையான் மெய்கண்ட தேவன் என்பவர் ஒரு சிவன் கோவிலைக் கட்டுவித்தார். அது (அவர் பெயரால்) மெய்கண்டீசுவரம் எனப்பட்டது. அப்பெரியார் அதே ஊரில் ஓர் ஏரியை வெட்டுவித்தார். அவ்வேரி (அவர்பெயரால்) மெய்கண்டதேவப் புத்தேரி எனப் பெயர்பெற்றது.

இக்கல்வெட்டுச் சோழன் மூன்றும் இராசராசனது பதினாறும் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டது. அவ்வரசன் கி. பி. 1216 இல் அரியணை ஏறினான். எனவே, அவனது பதினாறும் ஆட்சியாண் டாகக் கி. பி. 1232 அமைகிறது. சிவஞான போதத்தைச் செய்த மெய்கண்ட தேவர் திருவெண்ணெய்நல்லூரில் பரஞ்சோதி முனிவரிடம் சமைய அறிவுபெற்று, மெய்கண்டார் என்னும் திருப்பெயரையும் பெற்று, மாணவர் பலர்க்குச் சித்தாந்த

[1] 485 of 1902; S. I. I. Vol. 8., No. 74.

உண்மைகளை வழங்கினர் என்று அவரது வரலாறு கூறுகிறது. எனவே, கல்வெட்டில் குறிக்கப்பெற்ற 'திருவெண்ணெய்நல் லூருடையான் மெய்கண்டதேவன்என்ற பெயர் சிவஞானபோதம் செய்த மெய்கண்டதேவரையே குறிப்பதாகும் என்று கருதுதல் பொருத்தமாகும்.

சைவ சித்தாந்த சாத்திர நூல்களுள் எட்டினைச் செய்த உமாபதி சிவாசாரியருக்குமுன் நான்காம் தலைமுறையில் விளங்கிய வரே மெய்கண்டதேவர் என்பது சந்தானசாரியரது வரலாறு கூறும் குறிப்பாகும். உமாபதிசிவம் இயற்றிய கடைசிநூல் சங்கற்ப நிராகரணம் என்பது. அவர் அந்நூலின் பாயிரத்தில்,

> " ஏழஞ் சிறுநூ றெடுத்த வாயிரம்
> வாழுநற் சகன மருவா நிற்ப " (பாயி. 2, 26-7)

தாம் அந்நூலை இயற்றியதாகக் கூறியுள்ளார். அஃதாவது, சங்கற்ப நிராகரணம் என்ற நூல் சகாப்தம் 1235 (கி. பி. 1313) இல் இயற்றப்பட்டது என்பது கருத்தாகும். கி. பி. 1313 இல் உமாபதிசிவம் வாழ்ந்தார் என்பது இதனல் தெரிகிறது. மேலே கூறப்பெற்ற மெய்கண்டதேவர் கி. பி. 1232 இல் வாழ்ந்தார் என்பது கல்வெட்டால் அறியப்படும். எனவே, இருவர் காலங் களுக்கும் இடையில் 81 ஆண்டுகள் இடைவெளி. இவ்விடை வெளி, உமாபதி சிவத்திற்கு நான்காம் தலைமுறைச் சந்தான குரவராகிய மெய்கண்ட தேவர்க்குப் பெரிதும் பொருந்துதல் காணலாம். எனவே, "திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவன்" என்று கல்வெட்டில் குறிக்கப்பெற்றவரே சிவஞான போத ஆசிரியர் என்று கொள்வது பொருத்தமாகும். இதனைக் கீழ்வரும் செய்திகளும் உறுதிப்படுத்தலைக் காணலாம்.

### தமிழ்ச் சைவ மடங்கள் :

மெய்கண்டதேவர் மாணவர் நாற்பத்தொன்பதின்மர் என்று அவர் வரலாறு கூறுகின்றது. அவருட் பலர் தமிழ்நாட்டுப் பல பகுதிகளில் சைவ மடங்களை நிறுவினர் என்பது வரலாறு. இவ்வரலாறு உண்மை என்பதைக் கல்வெட்டுக்கள் மெய்ப்பிக் கின்றன. ஏறத்தாழக் கி. பி. பதின்மூன்றும் நூற்றுண்டின் முற்பகுதியில்தாம் சில புதிய மடங்கள் தோன்றின. அவற்றுள் ஒன்று திருச்சத்தி முற்றத்துத் திருஞானசம்பந்தன் திருமடம் என்பது. அம்மடத்தைச் சேர்ந்த ஆண்டார் - பருதிப்பெருமாள் சந்தானத்தில் வந்தவருள் திருச்சத்தி முற்றத்து முதலியார்

ஒருவர். அவரது சந்தானத்தைச் சேர்ந்த கிளைமடங்கள் ஆனைக்கா, உசாத்தானம், வீழிவிழலை, வலிவலம் என்னுமிடங்களில் தோன்றின[3]

திருவிடை மருதூரில் மாளிகை மடம் என்று ஒன்று மூன்றும் இராசராசன் காலத்தில் (கி. பி. 1240 இல்) சிறப்புற்று இருந்தது.

சண்பைக்குடி முதலியார் சந்தான மடம் ஒன்று திருவானைக்காவில் மூன்றும் இராசேந்திரன் காலத்தில் (கி. பி. 1250 இல்) இருந்தது. இதைநோக்க, இதன் தலைமை மடம் சண்பைக்குடியில் இருந்திருத்தல் இயல்பேயாகும்.[4]

மாறவர்மன் குலசேகர பாண்டியன் (கி. பி. 1236) காலத்தில் திருவாலூரில் ஆசாரமழகியான் திருமடம் என்று ஒன்று இருந்தது. அதன் கிளை பாண்டிநாட்டுத் திருப்புத்தூரில் திருஞானசம்பந்தன் திருமடம் என்ற பெயருடன் இருந்தது. இவையும் முதலியார் மடங்களேயாகும்[5]. கி. பி. 1230-இல் திருச்செங்காட்டாங்குடியில் ஆண்டார் - மருதப்பெருமாள் சந்தானத்தைச் சேர்ந்த நமசிவாயதேவர் என்பவர் சிறுத்தொண்டன் திருமடத்தைக் கட்டினர்[6]. இச்சந்தான மடங்கள் கி. பி. 13ஆம் நூற்றூண்டில் பெருகினமைக்கு மெய்கண்டார் மாணவர்கள் காரணராயிருக்கலாம் எனக்கருதுதல் பொருந்தும்.

திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் சிவஞான போதத்துக்கு முற்பட்ட நூல்கள், திருவுந்தியாரைச் செய்த திருவியலூர் உய்யவந்த தேவநாயனர் ஒரு சைவப் பெரியார். அவருடைய மாணவர்க்கு மாணவரான திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனர் என்பவரே திருக்களிற்றுப்படியார் என்ற நூலைச் செய்தவர். சகலாகம பண்டிதர் திருத்துறையூர் மடத்துத் தலைவர். எனவே, மெய்கண்டாருக்கு முன்பே இந்நாட்டில் சைவமடங்கள் இருந்தன என்பது தெளிவு. அவை மெய்கண்டார் காலத்திலும் அவருக்குப்பின்பும் எண்ணிக்கையில் பெருகின என்பது இலக்கியத்தாலும் கல்வெட்டுக்களாலும் அறியப்படும் உண்மையாகும்.

---

[2] 218, 392, 586 of 1908; 109, of 1911; A. R. E. 1911, p. 75.
[3] 49 of 1911 [4] 584 of 1908 [6] 129 of 1908; A. R. E. 1909, p. 104.
[5] 76 of 1922.

# சிவாகமத் தெளிவு

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

### விநாயகர் துதி

வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
உண்மை விளக்கம் உரைசெய்யத் — திண்மதம்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்திவயிற் றைங்கரனைப்
பந்தமறப் புந்தியுள்வைப் பாம்.

## 1. ஆகமச் சிறப்பு

உலகத்திலுள்ள மக்கள் யாவராலும், 'துக்கநீக்கம் சுகப் பிராப்தி' என்ற இரண்டும் விரும்பப்படுகின்றன. இவ்விரண்டையும் ஒரு இடத்திலிருந்தே பெறவேண்டுமாயின், சிவ உபாசனையால்தான் பெறமுடியும்.

"இம்மை யேதரும் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலு மாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே."
—சுந்தரர்.

சிவ உபாசனையே, இவ்வுலகத்தில் சுகானுபவத்திற்கு வேண்டிய அன்னம், உடை அளிப்பதுடன் இடரை நீக்கி, முடிவில், சிவலோகத்தையும் அடைவிக்கும். ஆதலால், போகம் மோக்ஷம் இரண்டையும் பெற, சிவ உபாசனையே மிகவும் சிறந்தது.

ये चाऽथ शुद्ध भुवनोत्भव भोगकामाः
त्वामर्चयन्ति विविधैर्यजन प्रकारैः ।
तेभ्यः प्रदाय परमेश्वर साधकेभ्यः
भोगान्ददासि तदनन्तरमेव मोक्षम् ॥

இதனால், சுத்த புவன போகங்களில் விருப்பமுடையவர்களாய், சிவாராதனம் செய்பவர்களுக்குச் சிவன் முதலில் இம்மையிலுள்ள புவனபோகங்களை அளித்துப் பிறகு மறுமையிலும் முக்தியளிக்கிருர் என்பது அறியப்படுகிறது.

"குழைகொள் காதினர் கோவண ஆடையர்
உழையர் தாங்கட வூரின் மயானத்தார்
பழைய தம்மடி யார்செய்த பாவமும்
பிழையுந் தீர்ப்பர் பெருமா னடிகளே"

—அப்பர்.

சிவபெருமான், தம்முடைய அடியார் செய்த பாவமும் பிழையும் போக்குவார் என்று அப்பர் பெருமானும் கூறியுள்ளார். அடியார்க்கெளியனுன சிவபெருமானைப் பூஜிப்பவர்கள், இம்மை மறுமைப் பயன்களை யடைகின்ருர்கள். அத்தகைய சிவார்ச்சனையைப் புரிய அவ்விறைவனே ஆகமத்தை விளம்பினுர்.

"வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியா ரருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையி னுகமத் திறனெலாந் தெரிய
வுள்ள வாறுகேட் டருளினு ளுலகையா ளுடையாள்"

—பெரியபுராணம்.

வெள்ளியங்கிரியில் வீற்றிருப்பவரும் கங்கையைத் தரித்தவருமான சிவபெருமானின் திருவாக்கினின்றும் வெளிவந்த சிவாகமத்தை உமாதேவி கேட்டருளினுள்.

"எண்ணி லாகம மியம்பிய விறைவர்தாம் விரும்பு
முண்மை யாவது பூசனை யெனவுரைத் தருள
வண்ண லார்தமை யர்ச்சனை புரியவா தரித்தாள்
பெண்ணி னல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து"

—பெரியபுராணம்.

எண்ணிறந்த ஆகமங்களைத் திருவாய் மலர்ந்தருளிய இறைவனுக்கு விருப்பமுள்ளது பூஜை. ஆதலால் அந்தப் பூஜையைச் செய்து அவருடைய அருளைப் பெறவேண்டும் என்றும் தேவியே விரும்பினுள், ஆகவே, சிவபூஜையால் சிவானுக்ரகம் பெறவேண்டும். அந்த சிவபூஜை சிவாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்தச் சிவாகமங்கள் இறைவனுலேயே திருவாய் மலர்ந்தருளப்பட்டன.

" கிரியையென மருவு மவை யாவு ஞானங்
கிடைத்தற்கு நிமித்தமெனக் கிளக்கும் ."
—சிவப்பிரகாசம்.

என்றபடி சிவாகம முறைப்படி செய்யப்படும் கிரியைகள் யாவும் தத்துவஞானத்தின் அடிப்படையில் அமைந்திருத்தலால், சிவாகமக்கிரியைகள் சிறப்புடையன.

சிவபெருமானை வழிபடும் முறைகள், 'கன்மயாகம், தவயாகம், ஜெபயாகம், தியானயாகம், ஞானயாகம்' என ஐவகைப்படும். அவற்றுள் கன்ம யாகம், சிவபூஜையைச் சிவசிந்தனைமுதல் அக்னி காரியமீருகச் செய்யுஞ் செயல்களாம். தவயாகமாவது, சாந்திராயண விரதம் முதலியவற்ருல் காயக்லேசம் செய்தல், ஜெபயாகமாவது, மந்திரங்களை, 'வாசகம், இரகசியம், மானதம்' என்னும் முறையிற் செபித்தல். தியானயாகமாவது, இருதயம் முதலிய ஸ்தானங்களில் சதாசிவன் முதலிய திருமேனிகளைத் தியானிப்பது, இவ்வழிபாடுகளெல்லாம் கிரியை பொருந்தின வாயும், ஞானமுண்டாதற்குக் காரணமாயுமிருக்கும். 'தத்துவம், மூர்த்தி, பிரபாவம்' என்ற மூன்று வகையாலும் இறைவனை யறிந்து வழிபட்டுய்யத் தத்துவஞானம் சிறந்தது. அந்தத் தத்துவஞானத்தினுல் அறியப்படுவது,

" சிவனேடொக் கும்தெய்வம் தேடினு மில்லை
அவனேடொப் பார் இங்கு யாவரும் இல்லை "
—திருமந்திரம்.

என்ற வாக்கின்படி சிவன் மிக்காரும் ஒப்பாரும் இல்லாதவன் என்றும், " ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க " (திருவாசகம்) என்ற வாக்கின்படி ஆகமவடிவமாக இறைவன் இருக்கிருன் என்றும் புலனுவதால், ஆகம முறையினுல் செய்யப்படும் பூஜை சிறந்தது. வேதத்தில் கரும காண்டத்தில், 'சிவார்ச்சனை செய்க' என்று கூறி, அதனைச் செய்யும் முறையை அங்குக் கூருமையாலும், வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிஷதங்கள், பல கடவுட்கும் பரத்துவம் கூறுதலாலும். சிவன் ஒருவன்தான் பரமன் என்றும், அவனுடைய பூஜையினுல்தான் யாவற்றையும் அடையமுடியும் என்றும் வரையறுத்து, அவனைப் பூஜிக்கும் மார்க்கங்களையும் விரிவாகக் கூறுவதால், சிவாகமம் சிறந்தது.

शिवएकोध्येयश्शिङ्करः सर्वमन्यत्परित्यज्येति
समाप्ता अथर्वशिखा । (அதர்வசீர்ஷம்)

'எல்லாவற்றையும்விட்டு சிவன் ஒருவனே தியானிக்கத்தக்கவன்' என்று அதர்வசிகை உபநிஷத் அறிவிக்கிறது.

"யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாக ஞர்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவைவி லாதா னறிந்தருள் செய்வ னன்றே."

—சிவஞானசித்தியார்

'எவ்விடத்து யாதொரு தெய்வத்தைப் பொருளாகக் கொண்டீராயினும் அவ்விடத்து அத்தெய்வத்தினிடமாக நின்று அவ்வழிபாட்டை அறிந்து உயிர்கட்குப் பலனைக் கூட்டுபவன் சிவபெருமானே' என்பதால், விச்வாதிகனை சிவபிரான், எல்லோருக்கும் மேலானவன். ஆகவே, அவனே முழுமுதற்கடவுள் என்றும், அவனுடைய பூஜையே மேன்மையான பலனளிக்க வல்லது என்றும் கூறுவதால், சிவாகமம் சாலச் சிறந்தது.

"வேத மோடாகம மெய்யா மிறைவன் நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே."

—திருமந்திரம்

வேதமும் ஆகமமும், இறைவனால் செய்யப்பட்ட முதல் நூல்கள். அவை பொது, சிறப்பு என நிற்கும். வேதாந்தம், ஆகமாந்தம் (சித்தாந்தம்) இவை இரண்டும் வேறுபோல் தோன்றினும், ஆராய்ந்துபார்க்கும் பெரியோர்களுக்கு அபேதமாகவே விளங்கும்,

वेदसारमिदं तन्त्रं तद्वत्वैदिक माचरेत् ।
वेदान्तार्थमयं ज्ञानं सिद्धान्तं परमं शुभम् ॥

'வேதத்தின் சாரமாய், வேதாந்தப் பொருளின் ஸ்வரூபமாய், ஞானமயமாயிருக்கும் காமிகம் முதலிய இந்தத் தந்திரம், சித்தாந்தம் எனப்படும், இதனில் சொன்னபடி வைதிக தருமத்தை அனுஷ்டிக்கவேண்டும்' என்று மகுடாகமம் கூறுகிறது. ஆகவே,

வேதாந்தம் சித்தாந்தம் என்று இரண்டு அந்தமுடையதான வேதமும் ஆகமமும் ஒன்றே. ஆயினும் வேதம், த்ரைவர்ணிக விஷயம் என்றும், ஆகமம் ஸர்வவர்ணவிஷயம் என்றும், வேதம் அபக்வாதிகாரி விஷயமென்றும், சிவாகமம் பக்வாதிகாரி விஷயம் என்றும் கூறப்படுகிறது.

'நாமோ, வேத சிவாகமங்களுக்குப் பேதம் காண்கிலம் ; வேதத்தின்கண்ணும் சிவாகமம் என்னும் பெயர் வழங்குவது பொருத்தம் ; அது சிவனைக் கர்த்தாவாக உடைமையால்' என்று ஸ்ரீ கண்டர் தமது பாஷ்யத்தில் கூறியிருப்பதையும் காண்க. மற்றும்,

" ஆரணநூல் பொதுசைவம் அருஞ் சிறப்புநூலாம்
நீதியினுல் உலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கும் நிகழ்த்தியது "

என்று சிவஞானசித்தியாராலும், வேதம் பொது நூலும், சிவாகமம் சிறப்பு நூலுமாம். வேதம் உலகருக்கும் சிவாகமம் சத்திநிபாதருக்குமாக அருளப்பட்டன என்று சொல்லப்பட்டு உள்ளது.

ஆகவே வேதத்தில் கூருதொழிந்த பொருளையும், உபநிஷத்துண்மைப் பொருளையும் இனிது விளக்குதலின், சிவாகமம், 'சித்தாந்தம்' என்னும் பெயரை உடைத்தாய், சிறப்புடையதாகின்றது.

"வேதச் - சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்ருல் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியை யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்"

—சித்தியார்.

'வேத சிரசாகிற உபநிஷதங்களின்பொருளை மிகவும் ஆராய்ந்து தெளிவுற்றுச் சோபான முறையில் மேலேறிச்சென்ருல், சிவாகம நெறியாகிய சைவசித்தாந்தத்தைத் தலைப்படுவர். இதில் சரியை கிரியை, யோகம் செலுத்தியபின் ஞானத்தைப் பெற்று. சிவபெருமானது திருவடிகளை அடைதலாகும் முத்திப் பேற்றைப் பெறுவர்' என்பது அருணந்தி சிவாசாரியரின் அருள்வாக்கு.

இத்தகைய பேரின்பம் சிலருக்குத்தான் கிட்டும் என்று குமரகுருபர சுவாமிகளும் பண்டார மும்மணிக்கோவையில் கூறுகிருர்.

" வேத மென்னும் பாதபம் வளர்த்தனே
பாதப மதனிற் படுபயன் பலவே - அவற்றுள்
இலைகொண் டுவந்தனர் பலரே இலையொரீஇத்
தளிர்கொண் டுவந்தனர் பலரே தளிரொரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே
அவ்வா றுறுப்பும் இவ்வாறு பயப்ப
ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே."

வேதம் என்று ஒரு மரம்; அதனினின்றும் அடையப்படும் பயன் பல. அந்தப் பாதபத்தினின்றும் இலையைக் கொண்டே மகிழ்ந்தவர்கள் பலர்; தளிரைக்கொண்டு மகிழ்ந்தவர்கள் பலர்; அரும்பு மலர், பிஞ்சு, காய்களைக்கொண்டு மகிழ்ந்தவர்கள் பலர்; ஆனால் உச்சியிற் பழுத்த வேதாந்தமென்னும் குறையாத இன்பமுடைய அருமையான கனியின் சாரமாகிய, சிவாகம சித்தாந்தந்தைப் பெற்றவர்கள் மிகச் சிலரே. இதுபோல்,

" வேதம் பசுஅதன்பால் மெய்யா கமம் நால்வர்
ஓதும் தமிழ்அதனின் உள்ளுறுநெய் — போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம் "

என்ற வெண்பா அறிவிக்கிறது. வேதம் ஒரு பசுவாகும்; அதன் பால் போன்றவை சிவாகமங்கள்; அந்தச் சிவாகமங்களின் உட்கருத்தை வெண்ணெய்போற் கடைந்தெடுத்தவை தேவாரம் முதலிய திருமுறைகள்; அவ்வெண்ணெயின் சிவமணத்தை நன்குணர்த்துவன சிவஞானபோதம் முதலிய சித்தாந்த சாத்திரங்கள், எனவே, சிவாகமப் பொருளைத்தான் தெளிவாகத் தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளும், சிவஞான போதம், சிவஞானசித்தியார் முதலிய சாத்திரங்களும் எடுத்துக் கூறுகின்றன என்று விளங்குவதாலும், தேவியின் பொருட்டு இறைவனல் கூறப்பட்ட முதல் நூலாகையாலும், சிவாகமம் சிறந்தது.

# செய்திகள்

## கந்தர்சஷ்டி தரிசனம்

தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் வழக்கம்போல் இவ்வாண்டும் கந்தர் சஷ்டி தரிசனத்திற்குத் திருச்செந்தூருக்கு எழுந்தருளினார்கள். கந்தர்சஷ்டி விழா நாட்களில் உபவாசத்துடன் மௌனத்தவ மிருந்து செந்திற்குமரனை வழிபட்டு மகிழ்ந்தார்கள். இந்நாட்களில் முருகன் தோத்திரப் பாமாலைகள், திருமுறைப் பாராயணங்கள் முறையே நிகழ்ந்தன. சஷ்டித் திருநாளில் சூர சம்ஹாரத் தரிசனத்திற்குப் பின்னர் திருநெல்வேலிக்கு எழுந்தருளினார்கள். அங்கிருந்து பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு 29—11—64 அன்று தருமைக்கு எழுந்தருளினார்கள்.

## கந்தசஷ்டி விழா

வேளூரில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு கந்தசஷ்டிவிழா 5—11—64 முதல் தொடங்கி நடைபெற்றது. கந்தசஷ்டி விழா நாட்களில் ஸ்ரீ ஆறுமுகருக்கும், ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கும் சண்முகார்ச்சனரூபமான லக்ஷார்ச்சனை சிறந்த முறையில் நடைபெற்றது.

கந்தசஷ்டி விழாவைக் குறித்து நாள்தோறும் சமயச் சொற்பொழிவுகள் பிரசங்கசபா மண்டபத்தில் மாலை 6 மணிமுதல் தொடங்கி நடைபெற்றன. கந்தர்கலிவெண்பா, கந்தரனுபூதி, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், திருமுருகாற்றுப்படை, திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் முதலிய தலைப்புக்களில் அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். "குமாரசம்பவம்" என்ற தலைப்பில் ஸ்ரீரங்கம் எம்பார் பாகவதர் ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் குழுவினரால் கதாகாலக்ஷேபம் நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் வந்து தரிசித்தும் கேட்டும் உய்ந்தனர்.

மாயூரம் - குமரக்கட்டளையில் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் கந்தசஷ்டி விழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது 5—11—64 முதல் தொடங்கி நடைபெற்ற விழாவில் 10—11—64 அன்று சூரசம்காரமும் காட்சி கொடுத்தலும் நடைபெற்றது. விழா நாட்களில் நாள்தோறும் சிறந்த நாதஸ்வர இன்னிசை முதலியன நிகழ்ந்தன. விழாவையொட்டி சமயச்சொற்பொழிவுகளும், கதாகாலக்ஷேபமும் குமார விலாச மண்டபத்தில் நாள்தோறும் மாலை 6 மணிமுதல் தொடங்கி நடைபெற்றன.

ஒவ்வொருநாளும் தருமையாதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களால் முருகன் திருவவதாரம், தாரகாசுரன் வதம், பானுகோபன்வதம், சிங்கமுகன்வதம், சூரபதுமன் வதம், திருக்கல்யாணம் என்ற தலைப்புக்களில் கந்தபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன. மற்றும் பல அறிஞர்கள் "கந்தரனுபூதி, முருகன் அருள், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ்" முதலிய தலைப்புக்களில் சொற்பொழிவு நிகழ்த்தினர். 9—11—64 திங்கட்கிழமை ஸ்ரீ ரங்கம் எம்பார். ஸ்ரீமத். விஜயராகவாச்சாரியார் அவர்கள் குழுவினரால் வள்ளித் திருமணம் கதாகாலக்ஷேபமாக நிகழ்த்தப்பட்டது. அன்பர்கள் பலர் வந்து கேட்டு இன்புற்றனர்.

## திருக்கடவூரில் சங்காபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமிக்கு, ஆண்டுதோறும் கார்த்திகைச் சோமவாரங்களில் நிகழும், 1008 சங்காபிஷேகம் 16—11—64, 23—11—64, 30—11—64, 7—12—64 ஆகிய நாட்களில் சிறப்பாக நடைபெற்றன. 30—11—64, 7—12—64 ஆகிய நாட்களில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு பெருமான் அருட்பிரசாதம் வழங்கியருளினர்கள். மக்கள் திரளாகக்கூடி வழிபட்டனர். சோம வாரங்களில் வழிபாட்டிற்கு வரும் அன்பர்களுக்கு வசதியாக

பஸ் வசதி செய்யப்பட்டிருந்தது. 14—12—64 திங்கட்கிழமை யன்று 1008 சங்காபிஷேகம் சிறந்த முறையில் நிகழவிருக்கிறது.

## தருமையாதீனத் தமிழ்க்கல்லூரியில் பட்டிமன்றம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகத்தின் சார்பில் 21—11—64 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் கல்லூரிக் கட்டிடத்தில் பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்தில் பொருள் - கோவலன் பண்புள்ளவன் . அதுபோது அ வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. கலியபெருமாள் எம். ஏ. அவர்கள் தலைமையேற்றார்கள்.

கல்லூரியில் மூன்றும் ஆண்டில் பயிலும் மாணவர் கோபால் கடவுள் வாழ்த்துப்பாட, செயலர் கு. கலியமூர்த்தி அறிக்கைப் படித்தார், கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. வி. சபேசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள்.

கோவலன் பண்புள்ளவன் என்ற தலைப்பை ஒட்டி கல்லூரிப் பொறுப்பு முதல்வர், வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர் அவர்களும் மாணவர்கள் சந்திரசேகரன், முத்துக்கிருட்டினன், கலியமூர்த்தி. நடராசன், மணிவாசகன், கிருட்டினமூர்த்தி முதலியோர்களும்; கல்லூரிப் பேராசிரியர் வித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் மாணவர்கள் செல்வக்கணபதி, குப்புசாமி, ஆறுமுகம், இராமதாசு, பரஞ் சோதி, ஞானசுந்தரத்தரசு முதலியோர்களும் தலைப்பைவெட்டி யும் பேசினார்கள்.

தலைவர் தமது முன்னுரையில் கோவலன் சிற்றினம் சேர்ந் ததை வலியுறுத்தியும், அதே நேரத்தில் அவனது அறச்செயல் களைக் குறித்தும் சிறந்ததோர் விரிவுரையாற்றினார்கள்.

பிறகு பேராசிரியர் வித்துவான், திரு. வி. சபேசன் அவர் கள் வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண் டார்கள்.

இறுதியில் நாட்டு வாழ்த்துடன் கூட்டம் நிறைவெய்திற்று.

## உரையாசிரியர்கள் விழா

தருமையாதீனத் தமிழ்க் கல்லூரியில் 3—12—64 வியாழக் கிழமை மாலை மூன்று மணியளவில் உரையாசிரியர்கள் விழா நடைபெற்றது. அதுபோது கல்லூரிப் பேராசிரியர் வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் தலைமையேற்றார் கள். நடராசன் கடவுள் வாழ்த்துப் பாட, செயலர் கு. கலிய மூர்த்தி அறிக்கைப் படித்தார்.

மாணவர்கள் நடராசன், பழநிசாமி, தங்கராசு, சுந்தரவேல், காந்தி, சங்கரமகாலிங்கம், முத்துராமலிங்கம், செல்வக்கணபதி, பழநியப்பன் முதலியோர் பேசினார்கள்.

தலைவர் தமது முன்னுரையில் மாணவர்களை ஊக்குவித்தும் உரையாசிரியர்கள் பெருமைகளையும் தெளிவாக விளக்கினார். செயலர் கு. கலியமூர்த்தி அனைவருக்கும் நன்றி தெரிவிக்க நாட்டுவாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்திற்று.

சென்னை. சமயப்பிரசார நிலையத்தில்

## மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

நிலையத்தின் மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு 25-10-64 ஞாயிற்றுக்கிழமை மாலை திருவல்லிக்கேணியில் உள்ள ஸ்ரீ காம கலா ஸ்ரீ காமேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. குழுவினர் சார்பில் சுவாமிக்கு அபிஷேக ஆராதனை நிகழ்த்தப் பெற்றது. பிறகு குழுவினர் "திருஅங்கமாலைப் பதிகம்" ஓதிக்கொண்டே திருக்கோயில் வலம் வந்து முறையாக வழி பாடாற்றினர். பின்னர் ஆலய முன் மண்டபத்தில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சித்தாந்த வித்தகர் கயப்பாக்கம், திரு. சோமசுந்தரம் செட்டியாரவர் களும், இராவ்சாகிப். திரு. நல். முருகேச முதலியாரவர்களும் முறையே "ஆலய வழிபாடு" என்பது பற்றியும், "காமகலா காமேசர் ஆலயம்" என்பது பற்றியும் சிறந்த விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். சுவாமிசந்நிதியில் திரு. பி. சுவாமிநாதன் தேவாரத் திருமுறை ஓதி மகிழ்வித்தார். ஆலய அறங்காவலர் திரு. கணேசஐயரவர்களும், மற்ற அறங்காவலர்களும், திரு வல்லிக்கேணிவாசிகளும் குழுவினரை வரவேற்று வழிபாட்டை யும், பிரசாரத்தையும் நன்கு நடத்திக்கொடுத்தார்கள். அடுத்த மாத வழிபாடு சென்னை குயப்பேட்டை ஸ்ரீ கந்தசாமிகோயிலில் 22—11—64 ஞாயிறன்று மாலை நடைபெறும் என்று கூறி, திரு. ச. சிவகுமாரன் அறிவித்தார்கள்.

குருபாதம்

சென்னை. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலைய வழிபாட்டுக்குழுவினர் 60 பேர் பஸ்மூலம்

25—12—64 முதல் 31—12—64 முடிய நிகழ்த்தஉள்ள சோழநாட்டுக் காவிரியின் வடகரை மேற்குப்பகுதித்

# தலயாத்திரை விபரம்.

## 25—12—64 வெள்ளி 1

| | | |
|---|---|---|
| காலை | 4·15 | நிலையத்தில் வழிபாடு |
| ,, | 4-30 | வழியனுப்பு வாழ்த்துரை |
| ,, | 5·00 | புறப்பாடு |
| ,, | 10·15 | சிதம்பரம் ஸ்ரீ சபா நாயகர்கோயில் வழிபாடு |
| பகல் | 12-00 | திருநாரையூர் வழிபாடு |
| ,, | 1-30 | மாகேஸ்வர பூசை |
| மாலை | 3-30 | கானாட்டு முள்ளூர் வழிபாடு |
| ,, | 5·00 | திருஓமாம்புலியூர் வழிபாடு |
| ,, | 6·30 | காட்டுமன்னார்கோயில் வழிபாடு |
| ,, | 7-30 | உடையார்குடி வழிபாடும், சமயப்பிரசாரமும் |

## 26—12—64 சனி 2

| | | |
|---|---|---|
| காலை | 8-00 | திருக்கடம்பூர் வழிபாடு |
| ,, | 10-30 | கங்கைகொண்டசோழபுரம் வழிபாடு |
| பகல் | 12·30 | திருப்பனந்தாள் கோயில் வழிபாடு |
| ,, | 1·30 | மகேஸ்வரபூசை |
| மாலை | 3·00 | திரைலோக்கி வழிபாடு |
| ,, | 4·30 | திருச்சேய்ஞலூர் வழிபாடு |
| ,, | 5·30 | திருவாப்பாடி வழிபாடு |
| ,, | 7·00 | திருப்பனந்தாளில் சமயப்பிரசாரம் |

## 27—12—64 ஞாயிறு 3

| | | |
|---|---|---|
| காலை | 5-30 | திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வழிபாடு |
| ,, | 8·00 | சூரியனார்கோயில் வழிபாடு |
| ,, | 9·00 | திருமங்கலக்குடி வழிபாடு |
| ,, | 10-00 | திருக்கஞ்சனூர் வழிபாடு |
| ,, | 11-00 | திருமாந்துறை வழிபாடு |
| பகல் | 12-30 | திருக்கோடிகா வழிபாடு |
| ,, | 1·30 | மாகேஸ்வரபூசை |
| மாலை | 4-00 | திருந்துதேவன்குடி வழிபாடு |
| ,, | 5-30 | திருவியலூர் வழிபாடு |
| ,, | 6-30 | திருபுவனம் வழிபாடும், சமயப்பிரசாரமும். |

28—12—64 திங்கள் 4

காலை 7-00 திருக்கொட்டையூர் வழிபாடு
,, 8-30 சுவாமிமலை வழிபாடு
,, 10-00 திருஇன்னம்பர் வழிபாடு
,, 11-30 திருவைகாவூர் வழிபாடு
பகல் 12-30 திருப்புறம்பயம் வழிபாடு
,, 1-30 மாகேஸ்வரபூசை
மாலை 4-00 திருவடகுரங்காடுதுறை வழிபாடு
,, 6-00 திருவையாறு வழிபாடும், சமயப்பிரசாரமும்

29—12—64 செவ்வாய் 5

காலை 7-00 திங்களூர் வழிபாடு
,, 8-30 திருப்பழனம் வழிபாடு
,, 10-00 திருநெய்த்தானம் வழிபாடு
,, 11-30 திருப்பெரும்புலியூர் வழிபாடு
பகல் 1-00 மாகேஸ்வர பூசை
மாலை 3-30 திருக்கானூர் வழிபாடு
,, 6-30 திருவானைக்கா வழிபாடும் சமயப்பிரசாரமும்
,, 8-30 திருவரங்கம் வழிபாடு

30—12—64 புதன் 6

காலை 7-30 திருத்தவத்துறை (லால்குடி) வழிபாடு
,, 9-00 திரு அன்பில் ஆலந்துறை வழிபாடு
,, 10-00 திருமங்கலம் வழிபாடு (ஆனாயர் அவதாரத் [தலம்)
,, 10-30 திருமாந்துறை வழிபாடு
பகல் 12-00 திருப்பாற்றுறை வழிபாடு
,, 1-30 மாகேஸ்வர பூசை
மாலை 3-00 திருப்பைஞ்ஞீலி வழிபாடு
,, 4-30 திருப்பாச்சிலாச் சிராமம் வழிபாடு
,, 6-00 திருஈங்கோய்மலை வழிபாடும் சமயப் பிரசாரமும்

31—12—64 வியாழன் 7

காலை 7.30 திருமழபாடி வழிபாடு
,, 9-00 திருப்பழுவூர் வழிபாடு
,, 11-00 திருவிசயமங்கை வழிபாடு
பகல் 12-00 கலியபெருமாள் கோயில் வழிபாடு
,, 1-30 மாகேஸ்வரபூசை
,, 3-00 மருதூர் சித்தரைக் காணுதல்
,, 5-30 திருவாமூர் வழிபாடும் சமயப்பிரசாரமும்
இரவு 11-00 சென்னை சேர்தல்
,, 11-30 கடவுள் வாழ்த்து.

## கேரள மாநில ஆளுநர்

# உயர்திரு. வி. வி. கிரி அவர்களுக்கு

## வரவேற்பு

கேரள மாநில ஆளுநர் திரு. வி. வி. கிரி அவர்களுக்குத் தருமையாதீனத்தில் 9—12—64 மாலை 3-மணியளவில் சிறப்பாக வரவேற்பளிக்கப்பெற்றது.

வடக்கு வீதியிலுள்ள விருந்தினர் விடுதியிலிருந்து யானை, எடுபிடிகள், நாதஸ்வர இன்னிசைமுதலியவற்றுடன் வரவேற்று அழைத்துவரப்பட்டது. ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகைத் திருக் கோயிலில் கனம் கவர்னர் அவர்களுக்குப் பூரணகும்ப மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர் முறையாக வழிபாடு நிகழ்த்துவிக்கப் பெற்றது. திருக்கோயிலிலிருந்து ஆதீன முகப்பிலுள்ள நூல் நிலையத்தைப் பார்வையிட்டு ஸ்ரீ சொக்கநாதப்பெருமானை வழிபட்ட பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியைத் தரிசித்து மகிழ்ந்தார்கள். அப்பொழுது திருக்கயிலை யாத்திரை அனுபவங் களைக் குறித்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் எடுத் துரைத்தார்கள். கனம் கவர்னர் அவர்களும் ஸ்ரீமதி சரஸ்வதிகிரி அவர்களும் நயனிதாலில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை வரவேற்கும் பாக்கியம் தங்களுக்கு வாய்த்தது குறித்தும். அதிலிருந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் மானசீகமாக வழிபட்டு வருவது குறித்தும், இப்பொழுதாவது இங்கு வந்து தரிசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது குறித்தும் பெருமையாகப்பேசி மகிழ்ந்தனர். கயிலையாத்திரைப் படங்களைப் பார்த்து உத்தரப் பிரதேசத்தில் பல பெரும் தலங்களை மீண்டும் தங்கள் மனக்கண் களில் கொண்டு வந்ததாகவும் இது பெரும் பாக்கியம் என்றும் சொன்னார்கள். பின்னர், தொடங்கிய வரவேற்புக் கூட்டத்திற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள், எழுந்தருளி கவர்னர் அவர்களுக்கும், அவரது குமாரர்க்கும் பொன்னாடை போர்த்தி மலர்மாலை சூட்டி ஆசிகூறினார்கள். ஆளுநர் அவர்களின் மனைவி ஸ்ரீ சரஸ்வதிகிரி அவர்களுக்கு ஆதீனப் பல்கலைக் கல்லூரிப்

பேராசிரியை வித்துவான். திருமதி. ப. நீலா அவர்களைக்கொண்டு பொன்னாடை போர்த்துவித்து மலர்மாலை சூட்டுவித்தார்கள். ஆதினக் கல்விநிலையங்களின் சார்பில் வாழ்த்திதழை ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வாசித்தளித்தார்கள்.

நன்றிதெரிவித்து ஆளுநர் அவர்கள் பேசிய ஆங்கிலப் பேச்சை மாயூரம் திருவாளர் V. இராமநாத அய்யர் அவர்கள் மொழிபெயர்த்தார்கள். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் நன்றிகூற இறை வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவெய்திற்று.

## கேரள மாநில ஆளுநர் திரு. வி. வி. கிரி அவர்களுக்கு

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் வழங்கிய ஆசியுரை

மெய்யன்பர்களே! இன்று ஒரு நல்ல நாள். இங்கே வீற்றிருக்கும் கிரி அவர்கள் ஒரு பெருந்தலைவர். அரசியலில் அவர்கள் ஈடுபட்டிருந்தாலும்கூட சிறந்த தெய்வபக்தியுள்ள வர்கள். நாம் கைலாய யாத்திரையை மேற்கொண்டிருந்தபோது உத்தரப்பிரதேசம் ஆளுநராக இருந்தார். நயனிதாலில் கோடைக்காகத் தங்கியிருந்தபோது எங்களை மிக்க அன்புடன் வரவேற்றார். அரசியலில் உள்ளவர்களுக்குக்குத் தெய்வபக்தி அடியார் பக்தி உண்டு என்ற கருத்துக்குச் சான்றாக இவர்கள் விளங்குகிறார்கள். அந்த எண்ணமே இவர்களை இங்கே வரச் செய்தது. நயனிதாலில் எங்களை அவர்கள் அன்புடன் வரவேற்றபோது, அவர்களை இங்கு வரவேண்டுமென்று அழைப்பு விடுத்தோம். நயனிதால் அரசமாளிகைக்குச் சென்ற நாள் குருவாரம். ஆளுநர் அவர்கள் மனைவியார் மிக்க அன்புடையவர். அவர்கள் தாமே அன்புடன் நேரில் உபசாரங்கள் செய்தார்கள். நம் அழைப்பை மறக்காமல் ஏற்று இங்கே வந்துள்ளார்கள், இத்தகு பெருந்தலைவரைப் பார்ப்பதும், அவர்கள் அறிவுரையைக் கேட்பதும் பெரும்பயன் தரும். அவர்கட்கு இன்று ஆதீனச் சார்பிலும் ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பிலும் வரவேற்பு

அளிக்கப்படுகிறது. அரசியலிலும், சமயத்திலும் பெரும் ஊக்கமுடைய இவர்களுக்கு ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானின் அருளாசிகள் என்றும் உண்டாவதாக.

## கேரள மாநில ஆளுநர் கனம். திரு. வி. வி. கிரி அவர்கள் ஆற்றிய பேருரைச் சுருக்கம்

பெருமதிப்பிற்குரிய சுவாமிகள் அவர்களை இங்கே கண்டு ஆசி பெற்றதில் பெருமகிழ்வெய்துகிறேன். அவர்களது திருக்கயிலாய யாத்திரையின்போது நான் உத்தரப்பிரதேச ஆளுநராகப் பணியாற்றினேன். நயனிதாலில் அவர்களை வரவேற்கும் பெரும் பாக்கியம் எனக்கும், எங்கள் குடும்பத்தார்க்கும் கிடைத்தது. அதுபற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

இந்தியாவில் பல ஆதீனங்களையும், தனிப்பட்ட மடங்களையும் நான் சென்று கண்டிருக்கிறேன். அவற்றுள் சில நன்றாக இயங்குகின்றன; சில சுமாராக நடைபெறுகின்றன. நான் கண்டவரையிலும், இந்த ஆதீனம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. சுவாமிகள் நயனிதாலில் எங்களை இங்கு வரவேண்டுமென்று அழைத்தார்கள். அந்த அழைப்பே எங்களை இங்கே இன்று சேர்த்தது.

கடவுள் என்பது என்ன? உண்மை, அன்பு, பிரேமை. தன்னலமற்ற தியாகம், பிறர்துன்பமேற்றல் போன்ற சிறந்த குணங்களே கடவுள். இந்தச் சிறந்த குணங்கள் எல்லாம் சுவாமிகளிடம் அமைந்துள்ளது. எனவே, அவர்களே கடவுள். கடவுளின் மட்டற்ற பெருந்தன்மையை எல்லாரும் அறிந்து கொள்வதென்பது முடியாது. அவர்கள், எந்தப்பொருளையும் விரும்புபவர்கள் இல்லை; அவர்கள் எதையும் தன்னலத்தேவையாகக் கருதுவது இல்லை; சுய கௌரவம் போன்றவைகளை அவர்கள் எதிர்பார்ப்பதும் இல்லை. அவர்கள் கடவுளை நன்கு அறிந்தவர்கள். கடவுள் தொண்டிற்காகவே வாழ்பவர்கள். அவர்கள் இந்த ஆதீனத்தின் வருவாயை நல்ல புனிதமான காரியங்களுக்காகவே செலவிட்டு வருகிறார்கள். பல கல்வி நிலையங்களை நிர்மாணித்துத் திறம்பட நடத்திக் குழந்தைகளை

உருவாக்கி இந்நாட்டை உருவாக்கும் நல்ல சிற்பிகளாக வளர்த்துவரும் அவர்கள் தொண்டே நான் கூறியதற்குச் சான்ருகும்.

என் போன்றவர்கள் அரசியலில் பெரும் பதவிகள் வகிக்க லாம். ஆன்மீகத் துறையை இவர்கள்போன்ற அருளாளர் களிடமிருந்தே நாங்கள் அறிந்துகொள்ள முடியும். என் மனை விக்கு, சுவாமிகளிடத்து உள்ள அன்பு மிக அதிகமானது. உடல் நலமில்லாத இந்நேரத்திலும் காரில் நெடுந்தூரம் பிரயாணம்செய்து எப்படியாவது சுவாமிகளைக் காண வேண்டுமென்று தீவிரமாக நின்று இங்கு வந்து சேர்ந்தோம். அவள், சித்தத்தை சிவன்பால் வைத்தவள். அவனருளால் பெற்ற எங்கள் மகனுக்குப் பெயர்கூட சங்கரன் என்பது. நீங்களெல்லாம் சுவாமிகளின் பொன்னூர் திருவடி நீழலில் வாழும் புண்ணியம் பெற்றவர்கள். அவர்கள் மேற்கொள்ளும் நல்ல தொண்டுகள் நிலைபெற நீங்களெல்லாம் துணைபுரிய வேண்டும்.

நானும் என்மனைவியும் மகனும் இங்குவந்தபோது சிறப் பாக வரவேற்பளித்தீர்கள். அவற்றிற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்தப்பக்கம் வரும்போதெல்லாம் சுவாமிகளைக் காண அவசியம் நாங்கள் வருவோம் என்று உறுதி கூறுகிறேன். மீண்டும் மீண்டும் அனைவருக்கும் வணக்கம்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Very clean. Excellent management. A peaceful atmosphere. Makes even a skeptic think for a while about the Almighty.

(Sd.) A. V. Mani,

7—12—64. Dy. Director. (Adm) Industries

Department,

Patna (Bihar)

# எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(குரோதிஞூ மார்கழிமீ 1உ முதல் 30உ முடிய)

(15—12—64 முதல் 13—1—65 முடிய)

## 1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை $\frac{1}{4}$

அசுவதி நக்ஷத்திரம் 4 பாதமும் பரணி முதல் பாதமும் சுப சந்தோஷத்தைத் தரும். ஜீவன லாபமும், இல்லற சுகமும் ஓங்கும்; பரணி 2, 3, 4 பாதமும் கார்த்திகை முதல் பாதமும் அதிகமான மனக்கவலையைக் கொடுக்கும். எதிர்பாராத சில சம்பவங்களையும் காட்டும், மிச்ரமான பலனைக் காட்டும். திங்கள் வியாழன் சுபமாகும்.

## 2. ரிஷபம். கார்த்திகை $\frac{3}{4}$ - ரோஹிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதக்களும், மகத்தான சுப சந்தோஷத்தைத் தரும். உத்தியோக உயர்வும் இல்லறசுகமும், மேலோர் பெரியோர்களுடைய அன்பும் கிடைக்கச் செய்யும்; தெய்வபலம் முன்னின்று காக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 3. மிதுனம். மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுன ராசி 9 பாதங்களும், மிச்ரபலனைத் தரும். வரவு செலவு சமனாகும். எந்தக் காரியங்களும் தவக்கத்தோடு பூர்த்தியாகும். அடிக்கடி சஞ்சார பலன் ஏற்படும். விசேஷமான லாபத்தைத் தராது. சனி, செவ்வாய் சுபமாகும்.

## 4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபத்தையும், சந்தோஷத்தையும் தரும். புத்திராதிகளால் மேன்மையை உண்டுபண்ணும்; வியவகாரங்கள் சமாதானத்தால் தீரும். நஷ்டமான பொருள் கிடைக்கும். உத்தியோக உயர்வும் ஜீவன லாபமும், ஏற்படும். எங்கும் நிறைந்த கிர்த்தி ஏற்படச் செய்யும், தெய்வபலம் முன்னிற்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மகம் 4 பாதமும் பூரம் நான்கு பாதங்களும் சுபமேயாகும். அடிக்கடி வெளியூர் சஞ்சாரங்கள் ஏற்படச்செய்யும். ஸ்திர ஜீவனமும் சுக வாழ்வும் உண்டுபண்ணும். உத்திரம் முதல் பாதம் மிச்ரபலனைத் தரும். வரவு செலவு சமனுகும். அதிக செலவும் உண்டாகும். உத்தியோக உயர்வு உண்டு. சனி செவ்வாய் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமேயாகும். மிச்ர பலனையும் சரீர பீடைகளையும் கொஞ்சம் காட்டும். அடிக்கடி புத்திக்கு சலனமும் ஏற்படும், ஆனுலும் வாழ்கைத்தரம் உயரும். மேலோர் பெரியோர்களின் அன்பும், ராஜாங்க அனுகூலமும் அனேகவிதமான யக்ஞயாகாதி பலன்களும் தந்து மகா கீர்த்தியை உண்டு பண்ணும். தெய்வபலம் முன்னிற்கும். சனி ஞாயிறு சுபமாகும்

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலாராசி 9 பாதங்களும் ஆரோக்யத்தைத் தரும். எதிர் பாராத நஷ்ட தனங்கள் வந்துசேரும். உலகப் பிரசித்தியும் கீர்த்தியும் உண்டுபண்ணும். தனதான்ய விருத்தியாகும். சதா தெய்வசிந்தயையும் மேலோர் பெரியோர் அன்பையும் உண்டு பண்ணும். புதன் வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விசாகம் நான்காம்பாதமும், அனுஷம் 1, 2 பாதமும் சுபமிராது. அடிக்கடி வியாதி பீடைகளை உண்டுபண்ணும். சதா மனக்குழப்பமும் தாமதமும் உண்டாகும். அனுஷம் 3. 4 பாதமும் கேட்டை 4 பாதமும் கிரகசுகத்தைப் பூர்ணமாய்த் தரும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். விசேஷ நன்மைகளும் உத்தியோக உயர்வும் தாஞகவே வந்துசேரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தீராத வினைகள், தெய்வபலத்தால் நிவர்த்தி ஏற்படும். கிரக சுகம் ஓங்கும்.

நஷ்டமானபொருள் கிடைக்கும். மனம் சாந்தியடையும். சஸ்ய விருத்திதான்ய விருத்திகளில் கொஞ்சம் சிரமத்தைக் காட்டும். சதா தெய்வபலமே முன்னிற்கும். புதன், வியாழன் சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் உத்தியோகத்தில் மேல் பதவிகளைக் கொடுக்கும்; ஆரோக்யம் உண்டுபண்ணும். சதா சஞ்சார பலனையே தரும். களத்திரபுத்திர சுகங்கள் மேன்மேலும் விருத்தியாகும். எங்கும் கீர்த்தி ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

## 11. கும்பம். அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி - ¾.

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத் தரும். குடும்பத் தொல்லைகள் அதிகமாகும். எல்லாக்காரியங்களும் தவக்கத்துடன், பூர்த்தியாகும். தூரதேசத்திலிருந்து பந்துமித்ராளுடைய சேர்க்கை ஏற்படச்செய்யும். செலவினங்கள் அதிகமாகும். சனி, செவ்வாய் சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.


மீனராசி 9 பாதங்களும்; ஜீவனலாபத்தைத் தரும். மேலோர் பெரியோர்களுடைய அன்பு ஏற்படும். கிரக சுகம் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டுபண்ணும். அசாத்யமெல்லாம் சுலபசாத்யமாகும். தெய்வீகம் முன்னிற்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

குறிப்பு: இம்மாதத்தில் ஏற்படக்கூடிய உலக சுகதுக்கங்களைப்பற்றி சென்ற மாதத்திலேயே சகலமும் குறிப்பிடப்பட்டுள்ளன. கடவுள் துணைபுரிவாராக.

சுபம்.

திருச்செந்தூர்

கந்தசஷ்டி விழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ செந்திற்குமரனை வழிபடுதல்

உ
குருபாதம்

# தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்

## திருநெல்வேலி சந்திப்பு.

ஞாயிறுதோறும் சொற்பொழிவு மாலை 6-30 மணி

20—12—64 சடையநாயனர்
— திரு. வ. ச. நடராசபிள்ளை

திருவாதிரை விழா
— திரு. ம. சிவசம்பு

27—12—64 மானக்கஞ் சாரநாயனர்
— திரு. வ. ச. நடராசபிள்ளை

சொக்கநாதவெண்பா – பேசாநுபூதி
— திரு. ம. சிவசம்பு

3— 1—65 சாக்கியநாயனர்
— திரு. வ. ச. நடராசபிள்ளை

சொக்கநாதவெண்பா – விதிமார்க்கம்
— திரு. ம. சிவசம்பு

10— 1—65 வாயிலார் நாயனர்
— திரு வ. ச. நடராசபிள்ளை

சொக்கநாதவெண்பா – அடியார் பரிபாகம்
— திரு. ம. சிவசம்பு

வந்து, கேட்டு இன்புறுக !

நெல்லை அருணகிரி இசைக் கழகம்.

இராம. கனகசபாபதி,
அமைச்சர்.

Printed & Published by K. Sundaresa Iyer. Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam press, Dharmapuram (Mayuram) 10-12-64.